# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 22 இதழ் - 12 டிசம்பர் 2009



**கிறிஸ்துவின் சபை**

காங்கயம் 638 701. தமிழ்நாடு. இந்தியா.

04257 - 230030, 98427 - 30382, 99655 - 30385

e-mail : Kangayamcofc@eth.net.

# "துருவின் சாட்சி"

(Rust as a witness)

"கர்த்தருக்குக் கொடுத்தல்" பற்றி சத்தமாகவும், உபதேச சுத்தமாகவும் பேசும் 120 பக்கங்கள் கொண்ட புதிய நூலை அழகாக அச்சிட்டு சமீபத்தில் வெளியிட்டிருக்கிறோம்.

பரலோக பாக்கியத்தை மனமார வாஞ்சிக்கும், ஒவ்வொரு கிறிஸ்தவரின் கையிலும் இருக்க வேண்டிய மிக அவசியமான நூல்.

இப்புத்தகம் வேண்டுவோர் தபால் செலவுக்கு ரூ. 50/- மணியார்டர் செய்து பெற்றுக் கொள்ளலாம்.

— ஆசிரியர்.

# ஆசானின் அறிவுரையில் ...


1. ஆசிரியர் உரை ........ 1
2. கர்த்தரின் பந்தி கொடுப்பது எப்படி? ........ 9
3. பெண்கள் பகுதி ........ 13
4. வாலிபர் பகுதி ........ 17
5. சிறுவர் பகுதி ........ 21
6. பவுல் எப்போது இரட்சிக்கப்பட்டார்? ........ 24
7. துன்பப்படும் கர்த்தருடைய தாசன் ........ 27
8. பவுல் சிறை வைக்கப்படுதல் ........ 30

// THIRUMARAI AASAAN

S. Rajanayagam

Editor

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 22 DECEMBER - 2009 Issue - 12

ஆசிரியர் உரை

# இந்தப் போதனை உங்களை அழைத்தவரால் உண்டானதல்ல

சர்வ வல்ல தேவனால் ஞானமாய்ப் படைக்கப்பட்ட உலகின் வெவ்வேறு பகுதிகளில், சரித்திரத்தின் பல்வேறு கால கட்டங்களில் வாழ்ந்த மனிதர்களால், வித்தியாசமான காரணங்கள் மற்றும் சூழ்நிலைகளினால் தோற்றுவிக்கப்பட்ட மதங்கள் பல நாம் வாழும் உலகில் உள்ளதென்பதை நாம் அறிவோம். எப்படியோ எல்லா மதங்களுக்கும் பெரிய அல்லது சிறிய கூட்டங்கள் இருக்கவே செய்கிறது. அப்படி இருக்கும் அந்தக் கூட்டங்கள் பின்பற்றுவதற்கான வழிகாட்டும் நெறிமுறைகள் அந்தந்த மதத்தைத் தோற்றுவித்த மனிதர்களாலோ அல்லது அவர்களுடைய நேரடி வாரிசுகளாலோ அல்லது அவருக்கு நெருக்கமாக இருந்தவர்களாலோ உண்டு பண்ணி வைக்கப்பட்டிருக்கிறது. அப்படி உண்டு பண்ணி வைக்கப்பட்டிருக்கும் நெறிகளை அந்தந்தக் கூட்டத்தாருக்கு எடுத்துச் சொல்லும் முறைக்கு, அவரவர்கள் ஒரு பெயரைத் தெரிந்துள்ளனர். உதாரணமாக, ஏராளமான உருவங்களை வழிபடும் இந்து மதத்தில் அம்முறைக்கு “ ஆன்மீக சொற்பொழிவு ” என்றும், உருவ வழிபாடு இல்லாத இஸ்லாத்தில் அம்முறைக்கு “ ஓதுதல் ” என்றும் சொல்கின்றனர்.

அதே வேளையில், மனிதர்களால் தோற்றுவிக்கப்பட்ட மதங்களுள் ஒன்றாக இல்லாமல், பரலோகத்தின் தேவனால் திட்டமிடப்பட்டு, அவருடைய ஒரே பேறான குமாரனாகிய இயேசு

கிறிஸ்துவால் போதிக்கப்பட்டு, உன்னத மார்க்கமாகத் திகழும் கிறிஸ்தவம், தேவ திட்டத்தை வெளிப்படுத்தவும், கிறிஸ்துவின் நற்செய்தியை உலகிற்கு அறிவிக்கும் முறைக்கு சில வார்த்தை களை அங்கீகாரம் செய்திருக்கிறது. அவைகள் தான் " போதகம்", " பிரசங்கம் ", " உபதேசம் " போன்றவைகள்.

இப்படி கிறிஸ்தவத்தில் போதிக்கப்படும், கடைப்பிடிக் கப்படும் எல்லாமே பரலோக தேவனை மூல ஆதாரமாகக் கொண்டே இருக்க வேண்டும். ஏனெனில், இயேசு ஆண்டவரே, இப்பூமியில் வாழ்ந்து போதித்த வேளைகளில், அந்தப் போத னைகள் அவ்விதமாக இருக்கும்படியாகவே பார்த்துக் கொண்டார். எப்படியெனில், இயேசு அவர்களுக்குப் பிரதியுத்திரமாக; " என் உபதேசம் என்னுடையதாயிராமல், என்னை அனுப்பினவருடை யதாயிருக்கிறது " என்றும் (யோவான் 7:16), இன்னும், அதே யோவான் 12:49-ல், " நான் சுயமாய்ப் பேசவில்லை, நான் பேச வேண்டியது இன்னதென்றும் உபதேசிக்க வேண்டியது இன்ன தென்றும் என்னை அனுப்பின பிதாவே எனக்குக் கட்டளையிட் டார் " (யோவான் 12:49) என்றும் கூறியுள்ளார். இந்தக் கருத் தைத் தான், பேதுரு அப்போஸ்தலன், " ஒருவன் போதித்தால் தேவனுடைய வாக்கியங்களின்படி போதிக்கக்கடவன் " (1பேதுரு 4:11) என்று எச்சரித்துள்ளார்.

ஆக, கிறிஸ்தவத்தில், போதிக்கப்படும் அனைத்தும் தேவாதி தேவனை மூலமாகக் கொண்டிருக்க வேண்டும். இங்கே கலாத்தியர் நிருபத்தில் அதற்கான காரணம், " அவர் தான் உங்க ளை அழைத்தவர் " என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு கிறிஸ்த வனுக்கான அழைப்பு கிறிஸ்துவோடும், (மத். 9:13), பரிசுத்த ஆவியானவரோடும், (வெளி 22:17), சுவிசேஷத்தோடும் (2தெச 2:14) இணைக்கப்பட்டிருந்தாலும், இந்த அழைப்புக் கான மூலமாக தேவாதி தேவனே இருக்கிறார். இதே கலாத்தியர் புத்தகம், ஒன்றாம் அதிகாரத்தில் அதற்கான வசன ஆதாரங்கள் உள்ளது. (1:6,15). ஆகையால், கிறிஸ்தவத்தில் போதிக்கப்படு பவைகளும், ஏற்றுக்கொள்ளப்படுபவைகளும், கடைப்பிடிக்கப் படுபவைகளும் அழைத்தவ ருடைய போதனையாகவே இருக்க வேண்டியது அவசியம்.

சரி, " இந்தப் போதனை உங்களை அழைத்தவரால் உண்டானதல்ல " என்ற சொற்றொடரிலிருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டியவைகளைக் கற்றுக் கொள்வதற்கு முன், நமது வழக்கத்தின்படியாக, இச்சொற்றொடருக்கான பின்னணி பற்றிக் கொஞ்சம் தெரிந்து கொள்வோம்.

புதிய ஏற்பாட்டிலுள்ள 27 நூல்களுள் ஒரு 9 நூல்கள் முதல் நூற்றாண்டில் கிறிஸ்துவின் கட்டளைப்படி மேற்கொள்ளப்பட்ட நற்செய்திப் பயண ஊழியங்களால் ஆரம்பிக்கப்பட்ட 7 சபைகளுக்கு எழுதப்பட்டவை. இப்படி ஏழு சபைகளுக்கு எழுதப்பட்ட நிருபங்களுள் கலாத்தியருக்கு எழுதப்பட்ட நிருபம் சற்று வித்தியாசமானது. எப்படியெனில், மற்ற ஆறு சபைகளுக்கு எழுதப்பட்ட நிருபங்கள், ஒரு குறிப்பிட்ட பட்டணத்திலிருக்கும் சபை யாருக்கு மாத்திரம் எழுதப்பட்டவைகளாக இருக்கும் போது, கலாத்தியர் நிருபம் அந்த நடைமுறையிலிருந்து விலகி, அந்த நாட்டிலிருந்த “பல சபைகளுக்கு” எழுதப்பட்டுள்ளது. (கலா 1:2; 1 கொரி 16:2). அதாவது, ஒன்றுக்கும் மேற்பட்ட சபைகளுக்கு இந்நிருபம் எழுதப்பட்டுள்ளது. இந்த பிராந்தியத்தில் இருந்த சபைகளுக்கும், கிறிஸ்துவின் நற்செய்தியைக் கொண்டு பவுலடியாரால் ஆரம்பிக்கப்பட்ட மற்ற சபைகளுக்கும் அடிப்படையில் சில வேறுபாடுகள் உண்டு. முதலாவது வேறுபாடு, தன்னுடைய மூன்று நற்செய்திப் பயணங்களிலும் பவுலடியார் இப்பிராந்தியத்திற்குச் சென்றுள்ளார் என்பது. இரண்டாவது வேறுபாடு, இந்நிருபத்தை, இப்பிராந்தியத்திலிருந்த சபைகளுக்குப் பவுலடியார் ஆவியானவரின் துணை கொண்டு எழுதுவதற்கு ஒரு சிறப்பு நோக்கம் இருந்துள்ளதென்பது.

கிறிஸ்துவின் சிலுவைக்குப்பின்பும், மோசேயின் பிரமாணத்தின்படி நடக்க வேண்டியது அவசியம் என்ற யூத அடிப்படைவாதிகளின் போதகங்கள், இப்பிராந்தியத்திலிருந்த கிறிஸ்தவர்களை மிகவும் தள்ளாடச் செய்தது “ விருத்தசேதனம் ” பற்றிய உபதேசம். இந்தத் தள்ளாட்டம் பலரைப் பக்தி ரீதியாகத் தடுக்கி விழ வைத்து, பின்மாற்றமடையச் செய்தது. இப்படி அநேகர் உபதேசத்தில் தட்டுத் தடுமாறி விழுந்து போகிறார்கள் என்ற செய்தி, கிறிஸ்துவின் சுயாதீன உபதேசத்தைக் கொண்டு இவர்களைச் சத்தியத்திற்குள் வழி நடத்தின பவுலடியாரை அதிர்ச்சியடைய வைத்தது. ஆகவே தான், இந்நிருபத்தின் ஊடே, “ புத்தியில்லாத கலாத்தியரே, நீங்கள் சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமற் போகத்தக்கதாக உங்களை மயக்கினவன் யார்? இயேசு கிறிஸ்து சிலுவையிலறையப்பட்டவராக உங்கள் கண்களுக்கு முன் பிரத்தியட்சமாய் உங்களுக்குள்ளே வெளிப்படுத்தப்பட்டிருந்தாரே. ஒன்றை மாத்திரம் உங்களிடம் அறிய விரும்புகிறேன். நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலேயோ, விசுவாசக் கேள்வியினாலேயோ, எதினாலே ஆவியைப் பெற்றீர்கள்? ஆவியினாலே ஆரம்பம் பண்ணின நீங்கள் இப்பொழுது மாம்சத்தினாலே முடிவு பெறப் போகிறீர்களோ? நீங்கள் இத்தனை புத்தியீனரா? இத்தனைப் பாடுகளையும் வீணாய்ப்பட்டீர்களோ? அவைகள் வீணாய்ப் போயிற்றே (கலா 3:1-4) என்று பதறியுள்ளார்.

ஏனெனில், இந்த விருத்தசேதன போதகத்தின் தீவிரத்தைப் பவுலடியார் நேரிடையாகவே உணர்ந்திருந்தார். எப்படியெனில், தன்னுடைய முதல் சுவிசேஷ பயணத்தின் முடிவிலேயே, கள்ளப் போதகர்களின் கைவரிசையை சந்திக்க நேர்ந்தது. ஆம், சிலர் யூதேயாவிலிருந்து வந்து; " ***நீங்கள் மோசேயினுடைய முறைமையின்படியே விருத்தசேதனமடையாவிட்டால், இரட்சிக்கப்பட மாட்டீர்களென்று சகோதரருக்குப் போதகம் பண்ணினார்கள்.*** அதினாலே அவர்களுக்கும் பவுல், பர்னபா என்பவர்களுக்கும் மிகுந்த வாக்குவாதமும் தர்க்கமும் உண்டானபோது, அந்த விஷயத்தினிமித்தம் பவுலும், பர்னபாவும் அவர்களைச் சேர்ந்த வேறு சிலரும் எருசலேமிலிருக்கிற அப்போஸ்தலரிடத்திற்கும், மூப்பரிடத்திற்கும் போக வேண்டுமென்று தீர்மானித்தார்கள் " (அப். 15:1,2)

ஆம், இப்படிப்பட்ட தவறான போதகங்களைப் பவுலடியார் நேரிடையாகக் கேட்டும், எதிர்கொண்டும் இருந்தபடியால், கலாத்திய நாட்டு சபைகளுக்கான நிருபத்தின் இறுதிப் பகுதிக்கு வரும்போது, " ஆனபடியினாலே, நீங்கள் மறுபடியும் அடிமைத் தனத்தின் நுகத்துக்குட்படாமல், கிறிஸ்து நமக்கு உண்டாக்கின சுயாதீன நிலைமையிலே நிலை கொண்டிருங்கள் " (கலா 5:1) என்று வலியுறுத்துகிறார். இப்படி வலியுறுத்திவிட்டு தொடர்ந்து அந்த அதிகாரத்தில் பேசும் போதுதான் " ***இந்தப் போதனை உங்களை அழைத்தவரால் உண்டானதல்ல*** " என்று அடித்துக் கூறுகிறார். எந்தப் போதனை? இரட்சிப்புக்கு விருத்தசேதனம் அவசியம் என்று போதிக்கிறார்களல்லவா அந்தப் போதனை தான். ஏன் அந்தப் போதனை சரியில்லை? ஏனெனில், அந்தப் போதனை அவர்களை அழைத்தவரிடமிருந்து வந்த போதனை அல்ல, மாறாக, **யூதேயாவிலிருந்து வந்த சில கள்ளச் சகோதரர்களிட மிருந்து வந்த போதனையாக உள்ளது.**

எப்படி முதல் நூற்றாண்டில், கலாத்தியா நாட்டிலிருந்த சபைகளை, அவர்களை அழைத்த தேவனிடத்திலிருந்து வராமல், மனிதர்களிடத்திலிருந்து வந்த போதனைகள் அலைக்கழித்து, சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமல் போகச் செய்ததோ (கலா 5:7), அதுபோல், நாம் வாழும் இந்த இருபத்தோராம் நூற்றாண்டிலும், பரலோகத்தின் தேவனிடத்திலிருந்து வராத போதனைகள், கிறிஸ்துவைப் பின்பற்ற விரும்புபவர்களை ஆவிக்குரிய ரீதியில் அலைக்கழித்து, சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமல், கட்டுக்கதைகளுக்குச் சாய்ந்து போகச் செய்து கொண்டுள்ளது.

அப்படியானால், இப்பொழுது வாழ்ந்து கொண்டிருக்கும் நமக்கு " தேவனிடத்திலிருந்து வந்த போதனை " எது என்ற கேள்வி தானாக வருகிறது. இதற்கான பதில் மிகவும் சுலபமானது. வேதாகமத்தில் மூன்று காலங்கள் உண்டு. 1. முற்பிதாக்களின் காலம். 2. மோசேயின் காலம். 3. கிறிஸ்துவின் காலம்.

முதலாவது காலத்தில் வாழ்ந்தவர்களோடு தேவன் நேரிடையாகப் பேசியுள்ளார். இரண்டாவது காலத்தில் வாழ்ந்தவர்களோடு தேவன் மோசேயைக் கொண்டு பேசியுள்ளார் (உபா 5:1,2; அப். 7:38). மூன்றாவது காலத்தில் வாழ்ந்தவர்களோடு தேவன், கிறிஸ்து வைக் கொண்டு பேசியுள்ளார். (எபி. 1:1,2). உதாரணமாக, ஆபிரகாமிடத்தில் தேவன் பேசின காரியங்கள், ஊர் என்கிற பட்டணத்திலிருந்து ஆபிரகாமை அழைத்த தேவனிடத்திலிருந்து வந்த போதனைகள். மோசேயைக் கொண்டு சீனாய் மலையில் கொடுக்கப்பட்ட பிரமாணங்கள், இஸ்ரவேலர்களை எகிப்திய அடிமைத்தனத்திலிருந்து அழைத்த தேவனுடைய போதனைகள். கிறிஸ்து இயேசுவால் கொடுக்கப்பட்ட உபதேசங்கள், மனிதனைப் பாவத்தின் பிடியிலிருந்து மீட்டு எடுக்கும்படியான திட்டத்தைத் தீட்டின தேவனுடைய போதகங்கள்.

ஆக, ஒவ்வொரு காலத்திலும் வாழ்ந்தவர்களுக்கு தேவன் அவர்களுக்கேற்ற போதனைகளைக் கொடுத்துள்ளார். காலந்தவறி அந்தப் போதனைகளை மாற்றிக் கடைப்பிடிக்கும் போது, அது தவறான போதனையாக மாறுகிறது. கலாத்தியா சபைகளுக்குள்ளாக இருந்த பிரச்சினை அதுதான். விருத்தசேதனப் பிரமாணம் தேவனால் கொடுக்கப்பட்டு முற்பிதாக்கள் காலந்தொட்டு (ஆதி 17:10) இருந்து வருகிற ஒரு பிரமாணமாக இருந்தாலும், அந்தப் பிரமாணம் பயனற்றதாகி விட்ட பின்பு (கலா 3:1; 5:2,3; கொலோ 2:14,15) அதைக் கடைபிடித்தால், அது, அழைத்தவரால் வந்த போதனையாக இருக்க முடியாது. பிரமாணத்தைக் கொடுக்கும் தேவனுக்கு அதை மாற்றும் அதிகாரமும், எடுத்துப் போடும் அதிகாரமும் இருக்கிறதென்பதை நாம் தெரிந்து கொள்வது மிகவும் அவசியம்.

அப்படியானால், அருமையானவர்களே, இன்றைக்கு நானும், நீங்களும் பக்தி ரீதியாகப் போதிக்கும், கடைப்பிடிக்கும், கொண்டாடும் ஒவ்வொன்றும், நம்மைப் பாவத்தின் பிடியிலிருந்து மீட்டெடுக்கத் திட்டம் தீட்டின தேவனாலே, அவருடைய குமாரனைக் கொண்டு கொடுக்கப்பட்டிருக்கும் போதனைகளை ஆதாரமாகக் கொண்டவைகளாக உள்ளதா? அல்லது மனிதர்களால் கண்டுபிடிக்கப்பட்டு உட்புகுத்தப்பட்ட போதனைகளாக உள்ளதா? நாம் சிந்திக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

குறிப்பாக, வருடத்தின் இறுதி மாதத்தில் " கிறிஸ்துவின் பிறப்பின் பண்டிகை " என்ற பெயரால் கொண்டாடப்படும் பண்டிகை பற்றிய போதனை யாரால் உண்டானது? நம்மை அழைப்பவரால் உண்டானதா அல்லது மனிதர்களால் உண்டானதா? நம்மை அழைத்தவரால் உண்டானதாக " கிறிஸ்துமஸ் " போதனை

இருக்கு மானால் பின்னே ஏன் முதல் நூற்றாண்டுக் கிறிஸ்தவர்கள் இயேசுவின் பிறப்பை மையப்படுத்தும் " கிறிஸ்துமஸ் " பண்டிகையைக் கொண்டாடவில்லை?. கிறிஸ்துவின் சிலுவைக் குப் பின்னால் வாழும் நாம் " கிறிஸ்துமஸ் " பண்டிகை கொண் டாட வேண்டுமென்ற போதனை எங்கே உள்ளது? புதிய ஏற்பாட் டில், கிறிஸ்து வைப் பின்பற்றுவோர் அவரது பிறப்பின் பண்டி கையைக் கொண்டாட வேண்டுமென்று, ஆவியானவரால் ஏவப் பட்டு யாராவது ஒரு வேத ஆசிரியர் நமக்கு எழுதிக் கொடுத் திருக்கிறாரா? சொல்லுங்கள்!.

கிறிஸ்துவின் சிலுவைக்குப் பின்பு வாழும் நாம் நம்முடைய பக்தி வாழ்க்கையில், எதைச் செய்யலாம் அல்லது எதைச் செய்யக் கூடாது என்று சுபலமாகத் தீர்மானிப்பதற்கு ஓர் ஆலோசனை கொடுக்கிறேன். அதாவது, பக்தி ரீதியாக ஒன்றைச் செய்யலாமா வேண்டாமா என்று தடுமாறும் நேரங்களில் நாம் நான்கு கேள்வி களை நமக்கு நாமே கேட்டுக் கொள்ள வேண்டும். 1. இது குறித்து தேவன் கட்டளையிட்டிருக்கிறாரா? 2. இது சம்பந்தமாக இயேசு உபதேசித்திருக்கிறாரா? 3. கிறிஸ்துவின் அப்போஸ்தலர் கள் இதுபற்றி பிரசங்கித்திருக்கிறார்களா அல்லது எழுதிக் கொடுத்துள்ளார்களா? 4. முதல் நூற்றாண்டுக் கிறிஸ்தவர்கள் இக்காரியத்தைக் கைக்கொண்டிருக்கிறார்களா? இந்த நான்கு கேள்விகளுக்குப் பதில் " ஆம் " என்று வந்தால், அது ஆவிக் குரிய ரீதியில் எந்த ஒரு காரியமாக இருந்தாலும் அதைக் கண் களை மூடிக்கொண்டு செய்யலாம். ஆனால், பதில் " இல்லை " என்று வருமானால், அது எதுவாக இருந்தாலும், ஒருவேளை, அது உலகெங்கும் விமரிசையாகக் கொண்டாடப்படும் பண்டி கையாக இருந்தாலும் அதை ஒதுக்கி ஓரம் கட்டிவிட்டு, நமது புலன்களை அடக்கிக் கொண்டு அமைதியாக இருப்பது தான் புத்திசாலித்தனமானது.

ஒருவேளை, பழைய ஏற்பாட்டில் பண்டிகைகள் பற்றி இருக்கிறதே என்று நீங்கள் கேட்கலாம். ஆம், பண்டிகைகள் கொண்டாட வேண்டுமென்று உள்ளது. எவ்வித சந்தேகமில்லை. ஆனால், ஒன்றைப் புரிந்து கொள்வது அவசியம். கிறிஸ்துவின் சிலுவைக்குப்பின் வாழும் நம்மைப் பழைய ஏற்பாடு கட்டுப் படுத்துவதில்லை (ரோம 15:4). மாறாக, கிறிஸ்துவின் பிரமாண மே நம்மைக் கட்டுப்படுத்தி, நியாயந்தீர்க்கப் போகிறது (யோவா 12:48) பண்டிகைகள் பற்றி மோசேயின் காலத்தின் ஆரம்பத்தில் பலமாகப் பேசும் பழைய ஏற்பாடு, காலப் போக்கில், அதே பண்டிகைகள் பற்றி என்ன கூறுகிறது. என்பதை இங்கே கூர்ந்து கவனிப்பது நல்லது. " வருஷத்தில் மூன்று தரம் எனக்குப் பண்டி கை ஆசரிப்பாயாக " (யாத். 23:14) என்றும், " ஏழு நாள் கர்த்த ருக்குப் பண்டிகை ஆசரிக்கக்கடவீர்கள் " (எண் 29:12) என்றும்

பார்க்கிறோம். இப்படிப் பண்டிகைகளைக் கொண்டாடுங்கள் என்று கட்டளையிட்ட அதே தேவன், பழைய ஏற்பாட்டின் மத்திய பகுதியில் பண்டிகைகள் பற்றிய தன்னுடைய எண்ணத்தை அடியோடு மாற்றிக் கொண்டார். ஆம், " உங்கள் பண்டிகைகளை... என் ஆத்துமா வெறுக்கிறது " என்றும் (ஏசா 1:4) "உங்கள் பண்டிகைகளைத் துக்கிப்பாக மாறப் பண்ணுவேன் " என்றும் (ஆமோ 8:10) " அவருடைய எல்லா மகிழ்ச்சியையும், அவருடைய பண்டிகைகளையும்..... ஒழியப் பண்ணுவேன் " என்றும் (ஓசியா 2:11) இன்னும், பழைய ஏற்பாட்டின் கடைசி நூலாகிய மல்கியாவில், மிகவும் கடுமையாக " ..... உங்கள் பண்டிகைகளின் சாணியையே உங்கள் முகங்களில் இறைப்பேன் " (மல் 2:3) என்றும் கூறுகிறார்.

கொண்டாடுங்கள் என்று தான் சொன்ன பண்டிகைகளை தேவன் ஏன் இப்படிச் சாடுகிறார்? அவருடைய மனமாற்றத்திற்கு என்ன காரணம்? தேவன், ஒரு மேலான நோக்கோடு பண்டிகைக் கொண்டாட்டங்களைக் கொடுத்திருக்கும் போது, ஜனங்கள் அதன் மாண்பைக் குலைத்து, தேவனுடைய நோக்கத்தைச் சிதைத்தது காரணமாயிருக்குமோ? அல்லது பண்டிகைக் கொண்டாட்டங்களில் ஆன்மீகம் அழிந்து, ஜென்மீகம் தழைத்தோங்கியது காரணமாயிருக்குமோ? எது எப்படியோ, ஒன்று தெளிவாகத் தெரிகிறது. தேவனுடைய எதிர்பார்ப்பு ஜனங்களால் பாழாக்கப்பட்டுள்ளது.

ஆகவே, தேவன் புதிய ஏற்பாட்டுக்கு வரும் போது, பண்டிகைகள் குறித்து ஆரம்பத்திலும் எதுவும் பேசுவதில்லை, மத்திய பகுதியிலும் எதுவும் பேசுவதில்லை. இறுதியிலும் எதுவும் பேசுவதில்லை. விருத்தசேதன உடன்படிக்கையைக் கொடுத்த தேவனுக்கு, அதை எடுத்துப்போடவும் அதிகாரமிருக்கிறது, ஆகவே, அது கிறிஸ்துவின் காலத்தில் தேவையில்லை என்று பவுலடியார் ஆவியானவரின் துணை கொண்டு வாதிடுவதை, ஏற்றுக்கொண்டு விருத்தசேதனத்தை நிராகரிப்பது நியாயமானால், பண்டிகைகளை பழைய ஏற்பாட்டிலே கொடுத்த தேவன் புதிய ஏற்பாட்டில் அவைகளை எடுத்துப்போட்டார் என்று வாதிடுவதும் நியாயமாத்தானே இருக்க முடியும். தேவன் ஏதோ ஒரு உன்னத நோக்கத்தோடு பண்டிகைக் கொண்டாட்டங்களை ஒதுக்கி வைத்திருக்கிறார். எபேசு பட்டணத்து மூப்பர்களிடம் பவுலடியார் மிலேத்து பட்டணத்தில் பேசும் போது, *பிரயோஜனமானவைகளில் ஒன்றையும் நான் உங்களுக்கு மறைத்து* வைக்கவில்லை (அப். 20:20) என்று கூறுகிறார். ஆனால், பண்டிகைகள் பற்றிய உபதேசங்கள் புதிய ஏற்பாட்டில் மறைத்து வைக்கப்பட்டிருக்கிறது. அப்படியானால், இதன் பொருள் என்ன? தேவனுடைய பார்வையில் பிரயோஜனமற்றவைகள் என்பது தானே. தேவனுடைய பார்வையில் பிரயோஜனமற்றதாக இருக்கும் ஒன்றுக்கு, வேத

வசனங்களில் வெளிப்படுத்தப்படாத ஒன்றுக்கு முக்கியத்துவம் கொடுத்துக் கொண்டாடுவது எப்படி நியாயமாகும்? தேவன் இதை எப்படி எடுத்துக்கொள்வார்? அல்லது ஏற்றுக் கொள்வார்? நிச்சயமாக ஏற்றுக்கொள்ளமாட்டார்.

அன்பான வாசகரே, தேவன் ஏற்றுக் கொள்ளாத ஒன்றை, உலகில் எத்தனை பேர் செய்கிறார்கள் என்ற அடிப்படையில் நாம் கணக்கிட்டு ஒரு தீர்மானத்திற்கு வராமல், தனி ஒருவனாக நான் இருந்தாலும் தேவ சித்தத்திற்கு மாத்திரம் என்னை ஒப்புக் கொடுப்பேன் என்ற தீர்மானத்திற்கு நாம் வரவேண்டும். ஒரு வேளை, நாம் அப்படித் தீர்மானிக்கும்போது, நம்முடைய குடும் பத்தாரும், உற்றாரும், ஊராரும் அதில் பிரியப்படாவிட்டா லும் தேவன் நிச்சயமாக அதில் பிரியப்படுவார். தேவனுக்கு உகந்த வர்களாக வாழ விரும்புபவர்களுக்கு அதை விட வேறு என்ன வேண்டும்?

ஆகையால், அருமையானவர்களே, கிறிஸ்துமஸ் பண்டிகை யை நீங்கள் பிறந்தது முதல் குதூகலத்துடன் கொண்டாடியிருந் தாலும், அது " நம்மை அழைத்தவரால் வராத போதனையாக " வேத வசனங்களின் அடிப்படையில் இருப்பதால், இந்த வருடம் முதலாகிலும் அதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைப்போம். வேத வசனங்களின் போதனைகளோடு ஒன்றைக் கூட்டுவதும், குறைப் பதும் பாவமான காரியமாக இருப்பதால் (வெளி. 22:18,19) நம்மை அழைத்தவரால் வராத போதனைக்கு மாறாக துணிகரங் கொள்ளாமல், " வார்த்தையினாலாவது, கிரியையினாலாவது, நாம் எதைச் செய்தாலும், அதையெல்லாம் கர்த்தராகிய இயேசு வின் நாமத்தினாலே செய்து, அவர் முன்னிலையாகப் பிதாவாகிய தேவனை ஸ்தோத்தரிப்போம் " (கொலோ 3:17).

" தேவ சமாதானம் உங்களோடு கூட இருப்பதாக! "

**S. ராஜநாயகம்**

*திருமறை ஆசான் வாசகர்கள் ஒவ்வொரு வருக்கும், அடியேனின் குடும்பத்தின் சார்பாக புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.*

# கர்த்தரின் பந்தி கொடுப்பது எப்படி?

இப்பாடத்தில், நாம் கர்த்தரின் பந்தி நடத்துவது எப்படி என்று படிக்க உள்ளோம்.

புளிப்பில்லாத அப்பப் பண்டிகை அல்லது பஸ்கா பண்டிகையின் சமயத்தில் தன்னுடைய சீஷர்களோடு இறுதியாக அவர் போஜனம் செய்தபோது, இயேசு கிறிஸ்து இப்பந்தியை ஏற்படுத்தினார். இயேசு, மோசேயின் பிரமாணத்தின் கீழாக வாழ்ந்து மரித்தார். ஆனால், அது அவருடைய மரணத்தோடு முடிவுக்கு வர வேண்டியதாயிருந்தது. தன்னுடைய மரணத்தின் மூலம் புதிய பிரமாணத்தின் கீழாக வாழ்ந்து மரித்தார். ஆனால், அது அவருடைய மரணத்தோடு முடிவுக்கு வரவேண்டியதாயிருந்தது. தன்னுடைய மரணத்தின் மூலம் புதிய பிரமாணத்தை கொடுத்ததினாலே, பழைய பிரமாணத்தை நீக்கிப்போட்டார். ஆகையால், கிறிஸ்துவும், அவருடைய அப்போஸ்தலரும், பஸ்கா பண்டிகைக்கு கூடிவந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, இயேசு, கர்த்தரின் பந்தியை ஏற்படுத்தினார். வேத வசனம் இப்படிக் கூறுகிறது. அவர்கள் போஜனம் பண்ணுகையில், இயேசு அப்பத்தை எடுத்து, ஆசீர்வதித்து, அதைப்பிட்டு சீஷர்களுக்குக் கொடுத்து; நீங்கள் வாங்கிப்புசியுங்கள், இது என்னுடைய சரீரமாயிருக்கிறது என்றார். பின்பு பாத்திரத்தையும் எடுத்து, ஸ்தோத்திரம் பண்ணி, அவர்களுக்குக் கொடுத்து; நீங்கள் எல்லாரும் இதிலே பானம் பண்ணுங்கள். இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காக சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது. இது முதல் இந்த திராட்சப்பழரசத்தை நவமானதாய் உங்களோடே கூட என் பிதாவின் ராஜ்யத்திலே நான் பானம் பண்ணும் நாள் வரைக்கும் இதைப் பானம் பண்ணுவதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். (மத். 26:26-29) தன்னுடைய மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல் வரை பங்குபெறப் போவதில்லை என்று குறிப்பிடுவதை நாம் காணலாம். அதன்பிறகு அவருடைய சீஷர்கள் அவரை நினைவு கூரும்படியாக கர்த்தருடைய பந்தியில் பங்குபெறும்போது அவர்களோடு இருப்பார். கர்த்தருடைய பந்தி ஆரம்பிக்கப்பட்டது குறித்து, மாற் 14:22,25 மற்றும் லூக். 22:14-20 ஆகிய வசனப்பகுதியில் இடம் பெற்றுள்ளது.

அப்போஸ்தலன் பவுல் கொரிந்து பட்டணத்திலிருந்த கிறிஸ்தவர்களுக்கு கர்த்தருடைய பந்தியைக் குறித்துச் சொல்லும் போது, இப்படி எழுதுகிறார். நான் உங்களுக்கு ஒப்புவித்ததைக் கர்த்தரிடத்தில் பெற்றுக்கொண்டேன். என்னவெனில் கர்த்தராகிய

இயேசு தாம் காட்டிக் கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம் பண்ணி அதைப் பிட்டு, நீங்கள் வாங்கிப்புசியுங்கள். இது உங்களுக்காகப் பிட்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது. என்னை நினைவு கூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். போஜனம் பண்ணின பின்பு, அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் எடுத்து, இந்தப் பாத்திரம் என் இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது. நீங்கள் இதைப் பானம் பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தை தெரிவிக்கிறீர்கள். இப்படியிருக்க, எவன் அபாத்திரமாய் கர்த்தருடைய அப்பத்தைப் புசித்து அவருடைய பாத்திரத்தில் பானம் பண்ணுகிறானோ, அவன் கர்த்தருடைய சரீரத்தையும் இரத்தத்தையும் குறித்துக் குற்றமுள்ளவனாயிருப்பான். எந்த மனுஷனும் தன்னைதானே சோதித்தறிந்து, இந்த அப்பத்தில் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணக்கடவன். (1கொரி. 11:23-29).

மேற்சொன்ன வசனங்களில், கர்த்தர் அவருடைய ஜனங்களை, இந்தப் பந்தியில் பங்குபெறச் செய்வார் என்பது வெளிப்படையாக உள்ளது என்று நான் நினைக்கிறேன். அது மாத்திரமல்ல, கிறிஸ்துவின் சரீரத்தின் நினைவாக அப்பமும், அவர் சிந்தின இரத்தத்தின் நினைவாக, திராட்சரசமும் இருக்க வேண்டுமென்பதும் தெரிகிறது. கர்த்தர், ஏன் இந்தப் பந்தியைக் கடைபிடிக்கச் செய்கிறார்? ஏனெனில், நாம் இரட்சிக்கப்படும்படியாக உயிர்நீத்த அவரையும், அவர் செய்த தியாகத்தையும் நாம் நினைவுகூரும் பொருட்டுதான். நாம் இதில் பங்கு பெறும் போது, இயேசுக்கிறிஸ்து ஒருநாளில் மீண்டும் திரும்பி வருகிறார் என்பதை நமக்கும், கர்த்தருக்கும், உலகத்திற்கும் நாம் தெரிவிக்கிறோம்.

நாம் இந்தப் பந்தியில் பங்குபெறுவதற்கு முன், நம்மை நாமே சோதித்துப் பார்க்க வேண்டுமென்று பவுல் கூறுகிறார். அதாவது நாம் நம்முடைய இருதயத்தையும், வாழ்க்கையும், சோதித்துப்பார்க்கும் போது, மனம்திரும்பாத ஒரு பாவத்தையோ அல்லது மன்னிப்புப் பெற்றிராத ஒரு பாவத்தையோ கண்டால், நாம் நம்முடைய நிலையை கர்த்தரோடு சரியாக்கிக் கொண்டு, இந்தப் பந்தியில் பங்கு பெற வேண்டும். நாம், இதைச் செய்ய மறுப்போமானால், நம்முடைய இருதயத்தை தேவனுக்கு விரோதமாக கடினப்படுத்துகிறோமென்று பொருள். இது இறுதியில் நம்மை இழந்து போகச் செய்யும்.

அப்படியானால் யாரெல்லாம், கர்த்தரின் பந்தியில் பங்கு பெறலாம்? உண்மையில், இது அவருடைய வசனங்களின்படி, அவருடைய பிள்ளைகளாக மாறியவர்களுக்காகத்தான் ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் இந்தப் பந்தியை சபையில் கொடுக்கும்

போது, இதிலே கலந்து கொள்வதா? வேண்டாமா? என்பது கூடி வந்திருக்கிற *தனிப்பட்டவர்* தீர்மானித்துக் கொள்ள வேண்டியது. உதாரணமாக, நாம் முன்பின் அறிந்திராத ஒருவர் ஆராதனைக்கு வந்திருக்கக் கூடும். அப்பொழுது, இவர்கள் மாத்திரம் சத்தியத்தின்படி கிறிஸ்தவர்களென்று நமக்குத் தெரிந்தவர்களுக்கு மாத்திரம் கொடுத்தால், அந்த ஆராதனைக்கு வந்திருக்கிற சரியான கிறிஸ்தவன் ஒருவனுக்கு கொடுக்க மறுத்தவர்களாகி விடுவோம். கிறிஸ்தவரல்லாதவர்கள், இதிலே பங்குபெற விரும்பமாட்டார் என்று நாம் நினைத்துக் கொண்டு இப்பந்தியைக் கொடுக்க வேண்டும்.

அடுத்து, இப்பந்தியை எப்பொழுது கடைபிடிக்க வேண்டும்? எவ்வளவு நாளைக்கொருமுறை செய்ய வேண்டும்? அப். 20:7-ல் நமக்கு முன் உதாரணம் உண்டு. அங்கு கர்த்தருடைய சீஷர்கள் கிறிஸ்தவர்கள் அவரை ஆராதிக்கும்படியாக வாரத்தின் முதல் நாளிலே கூடி வந்திருக்கையில், கர்த்தரின் பந்தியில் பங்கு பெற்றார்கள் என்றுள்ளது. வசனம் இவ்வாறு கூறுகிறது, வாரத்தின் முதல்நாளிலே அப்பம் பிட்கும்படி சீஷர்கள் கூடி வந்திருக்கையில், பவுல் மறுநாளிலே புறப்பட வேண்டுமென்றிருந்தது, அவர்களுடனே சம்பாஷித்து நடுராத்திரி மட்டும் பிரசங்கித்தான். (அப். 20:7) இன்னும் அப். 2:42ல் அவர்கள் (கிறிஸ்தவர்கள்) அப்போஸ்தலருடைய உபதேசத்தில் உறுதியாய்த் தரித்திருந்தார்கள் என்று பார்க்கிறோம். அவைகளில் ஒன்று அப்பம் பிட்குதல், ஆக, இந்த இரண்டு வசனப்பகுதிகளும், கர்த்தரின் பந்தி பற்றி குறிப்பிடுகிறது.

கிறிஸ்தவர்கள் எவ்வளவு நாளைக்கொருமுறை, பாடவும், ஜெபிக்கவும், வேதவசனங்களைப் படிக்கவும், காணிக்கை கொடுக்கவும், கூடுகின்றனர்? ஒவ்வொரு வாரத்தின் முதல் நாளிலும் அல்லது ஞாயிற்றுகிழமைகளிலும் தானே. இதே போல்தான் கர்த்தரின் பந்திக்காகவும் கூடிவருகின்றனர். ஆகையால், நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து இந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணும் போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள் என்று பவுல் சொல்வதைக் கவனியுங்கள். (1கொரி. 11:26) அது எவ்வளவு நாளைக்கொரு முறை? ஒவ்வொரு வாரத்தின் முதல்நாள்தோறுமே.

இப்பொழுது, நீங்கள் இருக்குமிடத்திலோ அல்லது வேறு எங்கேயாகிலுமோ, ஒரு பிராந்திய சபையை தொடங்குவதாக இருந்தால், வாரத்தின் முதல் நாளிலான ஆராதனையின் ஒரு பங்காக, கர்த்தரின் பந்தி அவசியம் இருக்க வேண்டுமென்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். அங்கே இரண்டு பேர் இருந்தாலும் சரி, இருபது பேர் இருந்தாலும் சரி, ஆராதனைக்கு முன்பாக ஆண் அங்கத்தினர்கள் கூடி யார் யார் என்னென்ன

பங்கைச் செய்வது என்று ஆலோசிக்க வேண்டும். அப்பொழுது, கர்த்தரின் பந்திக்காக, ஒருவர் நியமிக்கப்பட வேண்டும். அவர் கர்த்தரின் பந்தியை சபையாருக்குக் கொடுக்கும் முன்பாக, வேதாகமத்திலிருந்து 1கொரி 11:23-29 அல்லது மத். 26:26-29 போன்ற பகுதிகளிலிருந்து ஒன்றை வாசித்து, அது பற்றி சில வார்த்தைகள் சொல்லலாம். கிறிஸ்துவின் மரணத்தைக் குறித்தும் வேறு சில வசனங்களையும் இச்சந்தர்ப்பத்தில் உபயோகிக்கலாம். அதன்பிறகு பந்தியை நடத்துபவர், கலந்து கொள்ளும் எல்லோரும் கிறிஸ்துவின் பாடு, மரணம் ஆகியவைகளை நினைவு கூரும்படியாக கலந்துகொள்ள வேண்டுமென்று சொல்லி, அப்பத்திற்காக ஜெபிக்க வேண்டும். அதன்பிறகு, பந்தியில் கலந்து கொள்ள விரும்பும் யாவரும் பங்கு பெறும்படியாய் கொண்டு செல்ல வேண்டும். வேறு யாராவது ஒருவரும் இவருக்கு உதவலாம். அப்பத்தில் பங்குபெற்ற பிறகு, இயேசுக் கிறிஸ்துவால் சிந்தப்பட்ட இரத்தத்திற்கு அடையாளமாக உள்ள திராட்சை ரசம் வைக்கப்பட்டுள்ள பாத்திரத்திற்காக ஜெபிக்க வேண்டும். அதன் பிற்பாடு, சிறு,சிறு கோப்பைகளில் திராட்ச ரசம் கொடுக்கலாம்.

கர்த்தருடைய பந்திக்கு தேவையானவைகளை ஆயத்தமாக்குவதைப் பொறுத்தளவில், பெண்கள் பெரும்பாலும் இதைச் செய்கின்றனர். இது தன்னார்வத்தில் செய்யப்படுகிறது. புளிப்பில்லா அப்பம் செய்து, திராட்சை ரசம் வாங்க வேண்டும். ரசம் கிடைக்காத பட்சத்தில் திராட்ச பழம் அல்லது திராட்சை வத்தல் வாங்கி அதிலிருந்து பிழிந்தோ அல்லது கொதிக்க வைத் தோ ரசம் உண்டாக்கலாம். இவைகளை சனி இரவோ அல்லது ஞாயிறு காலையோ செய்ய வேண்டும். அப்பத்தை ஒரு தட்டில் வைக்க வேண்டும். திராட்சரசத்தை ஒருபாத்திரத்திலோ அல்லது ஒரு கண்ணாடி குவளையிலோ அல்லது சிறுசிறு கோப்பைகளிலோ ஊற்றி வைக்கவேண்டும். பிறகு, இப்பாத்திரங்களை, வெள்ளைத் துணியால் மூடி, சிறு மேஜையின் மீது வைக்க வேண்டும். இதில் பங்கு பெறுகிற யாவரும் இப்பந்தியில் பங்குபெற முடிந்ததை ஒரு கனமான காரியமாகக் கருத வேண்டும்.

**J.C. சோட்**

## நீதிமொழிகள்

*1. கிரேக்க மொழியில் "சாலமோனின் நீதிமொழிகள்" என்றும்,*

*2. லத்தீன் மொழியல் "நீதிமொழிகளின் புத்தகம்" என்றும்,*

*3. அராமிக் மொழியில் "ஞானத்தின் புத்தகம்" என்றும் அழைக்கப்படுகிறது.*

பெண்கள் பகுதி

# " குடும்பங்களின் இன்றைய அத்தியாவசியத் தேவைகள் "

முதலாம் நூற்றாண்டில் நமதாண்டவராகிய இயேசு கிறிஸ்து பரிசுத்தமான விருந்தாளியாக பல வீடுகளுக்குச் சென்றுள்ளார். அவர் சென்ற எல்லா வீடுகளுமே தேவையில் இருந்தது. தேவகுமாரன் அந்தத் தேவைகளை சந்தித்தார். அதே இயேசு கிறிஸ்து இன்றைக்கு நம்முடைய சுகவீனம், பிரச்சினைகள், தீர்வுகள் போன்றவற்றிற்கும் உதவி செய்ய வல்லவராயிருக்கிறார். உண்மைச் சூழ்நிலை என்னவெனில், எல்லா குடும்பங்களுமே பற்பல தேவைகளில் இருக்கிறது. ஆனால் குடும்பங்களுக்கு குடும்பம் தேவைகள் வித்தியாசப்பட்டிருக்கிறது. இது எப்படி உண்மையெனில், சில குடும்பங்கள் இயேசு கிறிஸ்துவை மையமாக வைத்து அவரைச் சுற்றி தங்கள் காரியங்களை மேற்கொள்கிறார்கள். மற்றவர்கள் தங்கள் குடும்பத்தில் இயேசுவை வெளியே ஒதுக்கி வைத்து விட்டு தங்கள் விருப்பம்போல் வாழ்க்கையை நடத்துகிறார்கள்.

என்னுடைய திட்டமான வலியுறுத்தல் யாதெனில், இன்றைக்கு நாம் சந்தித்துக் கொண்டிருக்கும் பிரச்சினைகளுக்கு விடுதலை இயேசுவின் மூலம் மட்டுமே கிடைக்கும். அழகான அந்த ஏதேன் தோட்டத்தில் பிதாவாகிய தேவன் திருமணம் (குடும்பம்) என்பதை ஸ்தாபித்து வைத்தார். அக்குடும்பத்துக்கு தேவையான மகிழ்ச்சியை தேவன் தெரிந்து வைத்திருந்தார்.

இப்போது நம் தலைப்பில் கொடுக்கப்பட்டுள்ள இன்றைய குடும்பங்களின் அத்தியாவசியத் தேவைகள் என்னவென்பதைப் பற்றிக் காண்போம்.

### " அன்பு, துணை " - இன்றைய தேவை

கணவன், மனைவி ஆகிய இருவருக்குள்ளும் அதிக அன்பும், உறுதுணையும் தேவையாயிருக்கிறதல்லவா? இன்றைக்கு அதிக அளவு குடும்பங்கள் சீரழிகிறதென்றால் இந்த அன்பும் உறுதுணையும் இல்லாததே காரணம். இயேசுவையும், அவர் சொன்ன உபதேசங்களையும் ஓர் அர்ப்பணிப்பு உணர்வுடன் சார்ந்திருந்தால்தான் இரண்டையும் பெற்றுக் கொள்ள முடியும். பரலோக மைந்தனை உங்களுடைய குடும்பத்தில் ஒரு மாலுமியாக ஏற்றுக்கொள்ளாவிட்டால் நாம் ஒருபோதும் பரலோகம் செல்லவே முடியாது. இப்பூலோகத்தின் சொர்க்கமாக திகழ்ந்த ஏதேன் தோட்டத்தில் சிருஷ்டிகர்த்தாவாகிய நம்முடைய தகப்பன் ஆராய்ந்து மனிதன் தனிமையாய் இருப்பதை கவனித்து அது நல்லதல்ல என்கிறார். துணை வேண்டும் என்று நினைத்தார். மோசேயானவன் எழுதும்போது " மனிதன் தனிமை யாயிருப்பது நல்லதல்ல " " ஏற்ற துணையை உண்டாக்குவேன் என்றார் " என்கிறான் (ஆதி. 2:18).

ஆசையாய் உருவாக்கப்பட்ட அந்த துணை, ஆதாமின் வெற்றிடத்தை நிரப்புவதற்காக உருவாக்கப்பட்டாள். பெண் உருவாக்கப்பட்ட அந்த அழகான, அற்புதமான விதத்தை வர்ணிக்கும் வகையில் மோசே அதை இவ்வாறு விவரிக்கிறான் அயர்ந்த நித்திரையை, வருவித்து விலாவிலிருந்து எலும்பை எடுத்து, அதிலிருந்து பெண்ணை உருவாக்கி அவளை ஆதாமிடம் கொடுத்தார். உடனே ஆதாம் இவள் என் எலும்பில் எலும்பும், என் மாம்சத்தில் மாம்சமும் என்கிறான் (ஆதி. 2:21-24).

ஆனால், பிதா எதிர்பார்த்தபடி இல்லாமல் இந்த அன்பும், துணையும் மாறி, வெறுப்பு, பிரிவினை என்பது பாவத்தினால் வந்து சேர்ந்தது. (உபா. 24:1-4) வசனப்பகுதிகளில் கணவன், மனைவி பிரிந்தால் என்ன செய்ய வேண்டும் என்று கட்டளை என்று கட்டளை கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டு விட்டது. ஆதியாகமம் தொடங்கி மல்கியா வரை லட்சக்கணக்கான இஸ்ரவேல் ஜனங்களின் சரித்திரத்தை பார்க்கும்போது கணவன், மனைவி அன்பு கெட்டு, பிரிவினை துரோகம் ஏற்பட்டு விட்டது. தேவன் தம்முடைய தீர்க்கதரிசிகளைக் கொண்டு கடுமையாக எச்சரித்துக் கொண்டே வந்தார் (மல். 2:14-16) வாசிக்கும்போது தன் இளவயதின் மனைவிக்கு துரோகம் பண்ணாதிருங்கள் என்று எச்சரிக்கிறார். புதிய ஏற்பாட்டில் கணவன் தன் வீட்டை விட்டு பிரிந்து தன் மனைவியோடு இசைந்திருக்க வேண்டும் என்று தேவன் சொல்கிறார். (மத். 19:4-6). புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்று கூறுங்கள். அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்பு கூர்ந்தார் (எபே. 5:25) புருஷர்களும், மனைவி களை தங்கள் சொந்த சரீரங்களாக பாவித்து அன்பு கூற வேண்டும் (எபே. 5:28) புருஷர்களே உங்கள் மனைவிக்கு செய்ய வேண்டிய கனத்தை செய்யுங்கள் என்று 1பேதுரு 3:7-ல் கூறுகிறார். **வாழ்க்கை என்னுடையதல்ல, நம்முடையது என்ற தத்துவத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும்.** கிறிஸ்து, கணவன், மனைவி என்ற மூன்று கோடுகளும், ஒரு முக்கோணம் என்றால், மேல்கோணம் கிறிஸ்துவாகவும், கீழ் இரண்டு கோணங்களும் கணவனும் மனைவியுமாக இருந்தால் அதுதான் விசேஷமானது.

## புனிதம், மெய்ப்பற்று - இன்றைய தேவை

ஒழுக்கம் கெட்டு, ஒழுக்கத்தை செயல்படுத்துவது இயலாது என்ற நிலையில் இன்றைய நாட்கள் உள்ளது. ஒரு பெண்ணோ, பையனோ தன் வாலிபத்தை அடையாததற்கு முன்பு கீழ்க்கண்ட வசனங்களை தங்கள் சிந்தையில் கொள்ள வேண்டும். இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் தேவனை தரிசிப்பார்கள். (மத். 5:27,28) இயேசுக்கிறிஸ்து விபச்சாரத்தையும், வேசித்தனத்தையும் ஆரம்பத்திலேயே அடியோடு அறுக்க சொல்லுகிறார். (மாற்கு. 7:20-23)ல் மனுஷ னை தீட்டுப்படுத்துவது வேசித்தனம் விபச்சாரம் என்கிறார். (1கொரி. 6:18-20)-ல் வேசித்தனத்திற்கு விலகி யோடுங்கள் என்கிறார். கலாத்தியர். 5:19-21-ல் விபச்சாரம், வேசித்தனம் மாம்சத்தின் கிரியைகள் என்கிறார். பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லாவற்றையும்

விட்டு விலகுங்கள் (1 தெச. 5:22)-ல் கூறுகிறார். நீங்கள் வேசி மார்க்கத்துக்கு விலகி மோக இச்சைக்குட்படாமல், தன் தன் சரீர பாண்டத்தை பரிசுத்தமாயும், கனமாயும் ஆண்டுகொள்ளும்படி அறிந்து இந்த விஷயத்தில் ஒருவனும் மீறாமலும் தன் சகோதர னை வஞ்சியாமலும் இருக்க வேண்டும். கர்த்தர் நீதியை சரிகட்டு கிறவராயிருக்கிறார் (1தெச 4:3-7) என்கிறார்.

## பெற்றோர்கள் பிள்ளைகள் இவர்களுக்கிடையே அன்பு, துணை எவ்வாறு இருக்கிறது!

பெற்றோர்கள் கிறிஸ்தவ அன்பை பிள்ளைகளுக்கு காட்ட வேண்டும். பிள்ளைகளுக்காக பிள்ளைகளுடன் இருந்து வாழ வேண்டும். பிள்ளைகள் குடும்பத்தை ஆளுகை செய்யாமல், பெற்றோர்கள் பிள்ளைகளை ஆளுகை செய்ய வேண்டும். இது வேதாகமத்தின் கட்டளை. பிள்ளைகளின் தேவைகளை அன்போடு பூர்த்தி செய்ய வேண்டும். நீ பிள்ளையாயிருந்தால், இப்போது பெரியவனாகி தனி குடும்பமாய் இருந்தால், நீ எத்தனை முறை உன் பெற்றோரரை போய் பார்த்திருக்கிறாய்? எத்தனை முறை பேசியிருக்கிறாய்? அருகாமையில் இருந்தால், கடைசியாக நீ போய் உன் பெற்றோரைப் பார்த்து பேசி, அவர்கள் தேவைகளை சந்தித்து எவ்வளவு நாள் ஆயிற்று? இதோ, இன்று நான் பூலோகத்தார் யாவரும் போகிற வழியே போகிறேன் என்று யோசுவா. 23:14-ல் கூறியபடி உங்கள் பெற்றோர்கள் போகிற தற்குள்ளாக போய் கவனிக்காதபடி உங்கள் அலுவல்கள், நண்பர் கள் காரணமாயிருக்கிறார்களா? நிறைய பிள்ளைகள் தங்கள் பெற்றோர் கண்ணை மூடிய பிறகு அவர்கள் அன்பு, துணை இவற்றைப் பற்றி பெரிதாகப் பேசுவார்கள். பரிசுத்த ஆவியானவர் இதைப்பற்றி வேதாகமத்தில் எழுதிக் கொடுக்கவில்லையா (எபே. 6:1-2). தாமதமின்றி அவரின் போதனைப்படி நடப்போம். இயேசு கிறிஸ்து நம் அன்பும், துணையும் பலப்படவுமே இவ்வுல கிற்கு வந்தார்.

பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதும்போது பாலிய ஸ்திரீகளை எல்லாக் கற்புடன் கூடிய சகோதரிகளைப் போலவும், பாவித்து, புத்தி சொல்லு (2தீமோ 5:2) என்கிறார். 1. தீமோ. 5:22ன் சட்டமே உன்னை சுத்தவனாகக் காத்துக் கொள் என்பதுதான். பால் சம்பந்தப்பட்ட உறவு என்பது, திருமணம் சம்பந்தப்பட்ட ஒன்றாகத்தான் இருக்க வேண்டும். இந்த உறவு வேறு எந்த வகையில் கிடைத்தாலும் அது (பா-வ-ம்) என்ற மூன்றெழுத்திற் குள் அடங்கியே தீரும். குடும்பத்தின் பிரச்சினையென்னவெனில் இந்த பாவத்தை கணவன், மனைவி இதில் யாராவது ஒருவர் செய்வதின் காரணம்தான். இயேசு இதைப் பற்றி கூறும்போது வேசித்தன முகாந்திரத்தினாலொழிய தன் மனைவியை தள்ளி விடக்கூடாது என்கிறார். (மத். 5:32). (மத். 19:9)-லும் இதே காரியத்தை இயேசு கிறிஸ்து வலியுறுத்துகிறார் (நீதி. 9:17)-யை நாம் வாசிக்கையில் சாத்தான் கூறுகிற அறிவுரைகளை கேட்கக் கூடாது என்று ஞானி புத்தி சொல்லுகிறான். திருமணத்தின் மெய் பற்று புனிதத் தன்மை இவற்றிற்கு கிறிஸ்து அதிகாரியாக இருக்கிறார். எனவே கிறிஸ்துவின் உபதேசத்தை பின்பற்றுவோம்.

**மன்னித்தல், தயவு, இரக்கம், கரிசனை இன்றைய தேவை :-**

குடும்பமாயிருந்தாலும், சபையாயிருந்தாலும் மன்னித்தல் என்பது மிக அவசியம். மனுஷனுடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னித்தால், உங்கள் பரம பிதா உங்களுக்கும் மன்னிப்பார். மன்னியாதிருந்தால் உங்கள் தப்பிதங்களையும் மன்னியாதிருப்பார் (மத். 6:14,15). ஒருவரையொருவர் தாங்கி, ஒருவர் பேரில் ஒருவருக்கு குறைபாடு உண்டானால், கிறிஸ்து உங்களுக்கு மன்னித்தது போல, ஒருவருக்கொருவர் மன்னியுங்கள் (கொலோ. 3:13). கொலோசே பட்டணத்து மக்கள், குடும்ப சூழல், குடும்ப உறவு நிலைகளின் மத்தியில் வாழ்ந்தவர்கள். பவுல் மனைவிகளுக்கும், கணவர்களுக்கும், பெற்றோருக்கும் கூறுவதைப் பாருங்கள். மனைவிகளே, கர்த்தருக்கேற்கும்படி உங்கள் புருஷருக்குக் கீழ்ப்படியுங்கள். புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்பு கூறுங்கள். அவர்கள்மேல் கசந்து கொள்ளாதிருங்கள். பிள்ளைகளே, உங்கள் பெற்றோருக்கு எல்லாக் காரியத்திலேயும் கீழ்ப்படியுங்கள். இது கர்த்தருக்குப் பிரியமானது. பிதாக்களே, உங்கள் பிள்ளைகள் திடனற்று போகாதபடி அவர்களுக்கு கோபமூட்டாதிருங்கள் (கொலோ. 3:18-21).

மன்னிப்பு என்பது ஒன்று, இரண்டு, மூன்று முறை அல்ல, பேதுரு ஏழுமுறை போதும் என்று நினைத்தபோது, இயேசு கிறிஸ்து ஏழெழுபது முறை (மத். 18:22) என்கிறார். இயேசுக் கிறிஸ்து (மத். 17:4)-ல் ஒருநாளில் ஏழுதரம் உனக்கு விரோதமாய் குற்றஞ் செய்து ஏழுதரமும் உன்னிடத்தில் வந்து, நான் மனஸ்தாபப்படுகிறேன் என்று சொன்னால், அவனுக்கு மன்னிப்பாயாக என்றார். இயேசுவைப் பின்பற்றும்போது நம் இருதயம் இளகி மென்மைத்தன்மையை அடைகிறது. இது இன்றையத் தேவைதான், அன்பான வார்த்தை தயவை ஏற்படுத்துகிறது. இதைப் பற்றி வேதம் கூறும்போது, ஒருவருக்கொருவர் தயவாயும் (எபே. 4:32) இருங்கள் என்கிறது. தங்க சட்டம் என்று போற்றப்படுகிற (மத் 7:12)-லும் இதையே நாம் வாசிக்கிறோம். மற்றவர்கள் நம்மீது தயவு, அன்பு, மன்னிப்பு இவைகளை காட்ட வேண்டும் என்று எதிர்பார்க்கும் போது நாம் இவைகளை முந்தி அவர்களுக்கு காட்ட வேண்டும்.

இரக்கமும், கரிசனையும் இன்றைய குடும்பங்களின் தேவையாயிருக்கிறது. இது ஏதோ கடையில் வாங்கும் பொருள்கள் அல்ல. குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவரும் இதை நடைமுறைப் படுத்த வேண்டும். அப்போது தான் பரலோகத்தின் தேவனும், இயேசு கிறிஸ்துவும் நம்முடைய குடும்பத்திற்கு ஆசீர்வாதத்தையும், இரக்கத்தையும் கட்டளையிடுவார். அப்பொழுது தான் புதிய ஆண்டு நமக்கு சமாதானம் நிறைந்ததாக இருக்கும்.

**ரேச்சல் ராஜநாயகம்**

வாலிபர் பகுதி

# " எழுந்து கட்டுவோம் வாருங்கள் "

வாலிப நெஞ்சங்களே, உங்களுக்கு ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதோடு உங்களை இந்தக் கட்டுரையின் வாயிலாக சந்திப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இன்றைய நாட்களில் வாலிபர்கள் ஆவிக்குரிய காரியங்களில் அதிக ஈடுபாடு இல்லாமல் இருப்பதை நாம் காண முடியும். அவர்களுடைய சிந்தனையும், செயலும் சரீரப்பிரகாரமான காரியங்களில் தான் இருக்கிறது. ஆவிக்குரிய காரியங்களில் ஈடுபடுவதற்கு நெகேமியா வாலிபர்களுக்கு நிச்சயமாகவே ஒரு தூண்டு கோலாக இருக்கிறார். முதலாவது நெகேமியா என்பதன் பொருள் யெகோவாவின் ஆறுதல் என்பதாகும். இந்த நெகேமியா பெர்சிய ராஜாவாயிருந்த அர்தசஷ்டாவுக்கு பானபாத்திரக்காரனாக சேவை செய்து கொண்டிருந்தார். அவர் பெர்சிய நாட்டின் தலை நகராயிருந்த சூசானில் உள்ள அரண்மனையில் இருந்த போதிலும் எருசலேமைப் பற்றியும், அங்கே தேவனுக்கடுத்த காரியங்களிலும் அவர் எப்படி அக்கறை உடையவராக இருந்தார் என்பது பற்றி நாம் பார்க்கலாம்.

## I நெகேமியாவின் துக்கம் :

நெகேமியா சூசான் அரண்மனையில் பானபாத்திரக்காரனாக பணிபுரிந்து கொண்டிருக்கும் போது, எருசலேமில் தன்னுடைய ஜனங்களாகிய யூதர்களைப் பற்றி யூதாவிலிருந்த சில மனிதர்களால் குறிப்பாக தன்னுடைய சகோதரரில் ஒருவனாயிருந்த ஆனானி மூலமாக கேள்விப்பட்டு அதிக துக்கமடைந்தார். இடிக்கப்பட்ட எருசலேம் மதில்கள் கட்டப்படாமல் இருந்தது இன்னும் அதிக துக்கத்தை அவருக்கு ஏற்படுத்தியது. நெகேமியா 1:1-4 வசனங்களில் நாம் நெகேமியாவின் துக்கத்தையும் இஸ்ரவேலின் துரதிஷ்டமான நிலையையும் காணலாம். இந்த வசனப்பகுதியை நாம் படிக்கும்போது பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் இது போன்று இரக்கமும், அக்கறையும் காட்டும் வசனப்பகுதிகள் நம்முடைய நினைவுக்கு வருகின்றன எரேமியா 9:1; ரோமர் 9:1-3. மேலும் இந்த வசனப் பகுதிகள் தேவனுடைய ஜனங்கள் மீதும், தேவனுடைய காரியங்கள் மீது தேவதாசர்களுக்கு இருந்த அக்கறையைக் காட்டுகிறது. இன்றைய நாட்களில் வாலிபர்கள் கவலை இல்லாத வாழ்க்கை வாழவேண்டும் என்பதற்காக சந்தோஷத்தை நாடிச் செல்கிறார்கள். ஆனால் வாலிபர்கள் அழிந்து போகின்ற ஆத்துமாக்களைக் குறித்து அக்கறை உடையவர்களாக காணப்பட வேண்டும்.

இயேசு கிறிஸ்து இந்த பூமியில் வாழ்ந்த போது பாடுகள் நிறைந்த மனிதனாக வாழ்ந்தார் என்று வேத வசனங்களில் நாம் காண்கிறோம். ஏசாயா 53 ஆம் அதிகாரத்தில் நாம் இதைத் தெளிவாக வாசிக்க முடியும். நாம் இந்த உலகத்தில் கிறிஸ்துவினிமித்தம் பாடுபட்டால் துயரப்பட்டால் நாம் பாக்கியவான்களாயிருப்போம். நமக்கு பரலோகத்தில் ஆறுதல் உண்டு. இந்த உலகத்திலேயே நமக்கு ஆறுதல் உண்டு. சரி, இப்போது நெகேமியாவின் மிகுந்த துக்கத்திற்கான காரணங்களைப் பார்ப்போம்.

நெகேமியா பெர்சிய ராஜாவாயிருந்த அர்தசஷ்டாவின் பானபாத்திரக்காரனாக பணிபுரிந்து கொண்டிருந்தார். அவர் முதன் முறையாக ராஜாவின் சமூகத்தில் துக்கமாயிருந்தார். பொதுவாக, அந்நாட்களில் பெரிய ராஜாவுக்கு சேவை செய்கிறவர்கள் ராஜாவுக்கு முன்பாக முழு சந்தோஷத்துடனே காணப்பட வேண்டும், இல்லையெனில் மரணம் அல்லது வேலை இழப்பு போன்ற துரதிஷ்டமான நிலைக்கு தள்ளப்படுவார்கள். நெகேமியா இதை நன்றாக அறிந்திருந்தபடியால் ராஜா நெகேமியாவைப் பார்த்து நீ துக்கமாயிருக்கிறது என்ன? என்று கேட்ட போது நெகேமியா மிகவும் பயந்ததாக நாம் நெகேமியா 2:2ல் வாசிக்கிறோம். அர்தசஷ்டா ராஜா நெகேமியாவின் குணாதிசயங்களை நன்கு அறிந்திருந்தபடியால் நெகேமியாவிடம் பிரியமாகவே இருந்தார். மேலும் நெகேமியா வியாதியாயிருக்கவில்லை என்பதை அறிந்திருந்த ராஜா நெகேமியாவுக்கு ஏதோ மனதின் துக்கம் இருக்கிறது என்பதை உணர்ந்து கொண்டு காரியம் என்னவென்று மென்மையாக அவரிடம் வினவினார். ராஜாவின் சாந்தமும், இரக்கமும் சம்பாஷணைக்கு வழிவகுத்தது. நெகேமியா பரலோகத்தின் தேவனை நோக்கி ஜெபித்தப்பிறகு அந்த சம்பாஷணை அல்லது உரையாடல் தொடங்கியது. உண்மையிலேயே இந்த நெகேமியா புஸ்தகம் முழுவதும் நெகேமியா தான் ஒரு ஜெபவீரன் என்பதை நிரூபித்திருக்கிறார். நெகேமியா எருசலேம் பட்டணம் அழிக்கப்பட்டு அதின் மதில்கள் இடிக்கப்பட்டு கட்டப்படாமல் இருந்ததினால் துக்கமாக இருந்தார் என்று பார்த்தோம் அல்லவா? இப்போது எருசலேம் அழிக்கப்பட்டதின் பின்னணியைப் பார்ப்போம்.

## II எருசலேம் அழிக்கப்பட்டதின் பின்னணி :

முதலாவது நாம் பாபிலோனிய சிறைப்பிடிப்பின் மூன்று கட்டங்கள் அல்லது எருசலேம் மூன்று முறை கைப்பற்றப்பட்டதை கவனிப்போம்.

யோயாக்கீம் நேபுகாத்நேச்சாருக்கு மூன்று வருடங்கள் சேவை செய்தான். அதன் பின்பு அவருக்கு எதிராக கலகம் செய்தான். நேபுகாத்நேச்சார் எருசலேமை கைப்பற்றி யோயாக்கீமை கட்டுகளுடன் பிடித்துச் சென்றார். அப்போது சில யூத

இளைஞர்கள் (தானியேல், சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ) உட்பட பாபிலோனுக்கு சிறைப்பட்டுப் போனார்கள். அது மாத்திரமல்ல, நேபுகாத்நேச்சார் எருசலேம் தேவாலயத்தில் இருந்த பணிமுட்டுகளை எடுத்து பாபிலோனிலிருந்த தன்னுடைய தேவனின் ஆலயத்தில் வைத்தான் (2 ராஜாக்கள் 24:1-7) (தானியேல் 1:1-7).

அடுத்ததாக யோயாக்கீம் எருசலேமில் மூன்று மாதங்களும், பத்து நாட்களும் ஆட்சி செய்த பிறகு நேபுகாத்நேச்சார் இரண்டாவது முறையாக எருசலேமைக் கைப்பற்றினார். அப்போது அவன் யோயாக்கீம் உட்பட தேவாலயத்தின் சகல பொக்கிஷங்களையும், ராஜாவுடைய அரண்மனையின் பொக்கிஷங்களையும், தேவாலயத்தில் உண்டாயிருந்த பணிமுட்டுகளையெல்லாம் எடுத்துக்கொண்டு பாபிலோனுக்கு சென்று விட்டான் (2 இராஜா 24:10-10).

மூன்றாவது, நேபுகாத்நேச்சாரின் பத்தொன்பதாம் வருடம், ஐந்தாம் மாதம் ஏழாவது நாளில் அவனுடைய இராணுவ தளபதி நெபுசராதான் எருசலேமுக்கு விரோதமாக அனுப்பப்பட்டான். அவன் தேவாலயத்தையும், ராஜாவின் வீட்டையும் எரித்துப் போட்டான். மேலும் இவன் எருசலேம் பட்டணத்தின் மதில்களை இடித்துப் போட்டான் (2இராஜாக்கள் 25:8-21) இந்த இடிந்து போன மதில்கள் கட்டப்படாமல் கிடந்ததால் தான் நெகேமியா துக்கமாக இருந்தார். இந்த மதில்களைக் கட்டி எழுப்புவதற்கு ராஜாவிடமிருந்து அனுமதி பெற்றுக்கொண்டு எருசலேமுக்குச் சென்றார். நெகேமியா வேலைத் தொடங்குவதற்கு முன்பு ஆயத்த வேலைகளைச் செய்தார், அது நகரத்தை சோதனை செய்வது உட்பட அநேக காரியங்களை உள்ளடக்கியது. (2:12-15). தேவாலயத்தைக் கட்டுவதற்கான பொருட்கள் பற்றி தான் நன்கு அறிந்தவராய் யூதர்களுக்கும், ஆசாரியர்களுக்கும், பிரபுகளுக்கும், உயர் அதிகாரிகளுக்கும், வேலையாட்களுக்கும் நன்கு பரிச்சயப்பட்டிருந்தார். மதில்கள் கட்டப்பட்டுக் கொண்டிருக்கும் போது எத்தனையோ எதிர்ப்புகள் வந்தது. ஆனால், நெகேமியா அவைகளைக் கண்டு துவண்டுபோகவில்லை. மதில்கள் கட்டி முடிக்கப்பட்ட போது நெகேமியாவின் எதிரிகள் அந்தக்கிரியை தேவனால் கைகூடி வந்ததென்று அறிந்து கொண்டார்கள்.

## III நெகேமியாவிடமிருந்து பாடங்கள் :

பொதுவாக தேவனுடைய வேலைகளில் ஒருவர் அக்கறை கொண்டு அதை நடைமுறைப்படுத்த தன்னை ஈடுபடுத்தும் போது சாத்தான் எவ்விதத்திலாவது அவரை சோர்வடையச் செய்வான், எப்படியாவது தேவனுடைய வேலையைத் தடுப்பதில் அவன் கெர்ச்சிக்கிற சிங்கமாக சுற்றித்திரிகிறான். நெகேமியா

மதில்களைக்கட்டினபோது சாத்தான் எத்தனையோ தடைகளைக் கொண்டு வந்தான். ஆனால், எல்லாத்தடைகளையும் தேவனுடைய உதவியினால் அவர் தகர்த்தெறிந்தார். நெகேமியா பிரச்சனைகள் வந்தபோதெல்லாம் அவர் ஜெபித்தார் (நெகேமியா 4:1-5,9); அவர் எதிரிகளோடு சமரசம் செய்து கொள்ளவில்லை. நெகேமி யா எப்படி பாழாய்க்கிடந்த மதில்களை கட்டி எழுப்ப மக்களை ஒன்று திரட்டி அவர்களை உற்சாகப்படுத்தி மதில்களைக்கட்டி எழுப்பினாரோ, அதுபோல நாமும் கூட ஜனங்களை தேவனிடத் தில் கொண்டு செல்லும் பணியை செய்ய வேண்டும். நமக்கு முன்னால் இருக்கும் பணியை எப்பாடுபட்டாவது செய்து முன்னேறுவோம். கர்த்தருடைய வேலைகளை கூட்டாகச் சேர்ந்து செய்வோம் " எழுந்து கட்டுவோம் வாருங்கள் " தேவன் நிச்சயமாக நமக்கு வெற்றியைத் தருவார்.

*பென்னிமார்ட்டின்*

## நாளும் நடப்பும்

1. புவி வெப்பமடைவதை தடுக்க வலியுறுத்தி, பருவநிலை மாற்றம் தொடர்பாக டென்மார்க்கில் கருத்தரங்கம் நடைபெற்றது.
2. தாலிபான்களை ஒடுக்க படைகளை அனுப்புவோம் என்று பாகிஸ்தானுக்கு அமெரிக்கா கடும் எச்சரிக்கை.
3. அமைதிக்கான நோபல் பரிசு பெற்றார் அமெரிக்க அதிபர் ஒபாமா.
4. கூவம் ஆறு சீரமைப்பு 10 ஆண்டுகளுக்குள் முடிக்க திட்டம்.
5. தெலங்கானா தனி மாநிலமாக அமைக்க மத்திய அரசு பச்சைக்கொடி.
6. வேதியியலுக்கான நோபல் பரிசை தமிழக விஞ்ஞானி வெங்கட்ராமன் ராமகிருஷ்ணன் பெற்றுக்கொண்டார்.
7. கோவையில் நடைபெறவிருக்கும் உலகத்தமிழ் செம்மொழி மாநாட்டிற்காக ரூ. 300 கோடியில் கட்டமைப்பு வசதிகள் என துணை முதல்வர் ஸ்டாலின் அறிவிப்பு.
8. இந்தியா டெஸ்ட் கிரிக்கெட் விளையாட்டில் முதலிடத்தை பிடித்து சாதனை புரிந்துள்ளது.

# ஆத்துமா

அன்பு குழந்தைகளே! வருடத்தின் இறுதி மாதத்தில் நிற்கும் உங்களுக்கு நம் உடலின் மேன்மை பற்றி கொஞ்சம் கற்றுக் கொடுக்கலாம் என்று இப்பாடத்தை உங்கள் முன் வைக்கிறேன்.

எப்பொழுது ஒரு மனிதன் தன் ஆத்துமாவைப் பெற்றுக் கொள்கிறான்? வேதாகமத்தில் யாக்கோபு என்ற ஆசிரியர் மூலமாக .... ஆவியில்லாத சரீரம் செத்ததாயிருக்கிறது (யாக். 2:26) என்று வாசித்து அறிந்து கொள்கிறோம். அதாவது ஆவி இல்லையென் றால், இந்த சரீரம் உயிர் வாழ முடியாது.

எப்பொழுது ஒரு உயிர் உண்டாகிறது? இதற்கு பதில் மிகவும் எளிமையானது. கருவில் ஒரு உயிர் உருவாகிறது. ஒரு உயிர் கருவில் உண்டானவுடன் அது உயிர் பெற்று விடுகிறது. அதாவது வாழ ஆரம்பித்து விடுகிறது. விஞ்ஞான உண்மைகளை வைத்து கருவில் உள்ள உயிர் உயிருடன் இருக்கிறதா என்று கண்டு கொள்ளலாம்.

**சில உண்மைகளை உங்களோடு பகிர்ந்து கொள்கிறேன்.**

1. கரு உருவாகி மூன்றாம் வாரத்தில் குழந்தையின் இருதயம் உருவாகி 21,22-ம் நாளில் இருந்து இதயம் சுருங்கி விரிய ஆரம்பித்து விடுகிறது. 22,23ம் நாளில் இருந்து நரம்புக் குழாய் வளர ஆரம்பிக்கிறது.
2. இரண்டு மாதத்தில், இதயம் நன்றாக துடிக்க ஆரம்பித்து மருத்துவர்கள் ஸ்டெதஸ்கோப்பில் கேட்கும் அளவு துடிக் கிறது. 5ம் வாரத்தின் இறுதியில் இதய அறைகள் பிரிக்கப் பட்டு விடுகிறது.
3. கருத்தரித்து 40ம் நாளில் மூளையின் செயல்பாடு ஆரம்பிக்கப் பட்டு மின்சார அலைகள் மூளையில் பதிவு செய்யப்படுகிறது.
4. 26-27 ஆகிய நாட்காலத்தில் சுவாச மண்டலம் உருவாக்கப் படுகிறது. அதாவது தொண்டைக் குழாய், மூச்சுக் குழாய், காற்றறைகள், நுரையீரல் போன்றவை உண்டாகிறது.
5. நான்காம் வாரத்தின் ஆரம்பத்தில் கல்லீரல், கணையம், பித்த நீர்பை போன்றவை உருவாகிறது.
6. இரண்டு மாத காலத்தில் கரு முழு வளர்ச்சியடைந்து அந்தந்த உறுப்புக்கள் அந்தந்த இடத்தில் உருவாகி விடுகிறது (பாதம்,

கை, தலை, உறுப்புக்கள், முதலியன). கைவிரல்கள் கூட உருவாகி விடுகிறது. ஒரு அங்குலத்திற்கு குறைவான நீளமாக இருக்கும்போதே கருவானது தலை, கண், காது, சிறிய உணவு மண்டலம், சிறுநீரகம், கல்லீரல், துடிப்புள்ள இதயம், இரத்த மண்டலம், மூளை வளர்ச்சி இவைகளைப் பெற்றுவிடுகிறது.

7. குழந்தை பிறக்கும் முன் வயிற்றில் இருக்கும்போதே துள்ளு கிறது, பெருவிரலை சப்புகிறது, தூங்குகிறது, தூங்கி எழுகிறது.

8. தொடு உணர்வு, வலி, குளிர், ஒலி, ஒளி இவைகளை உணர் கிறது பிறக்கும் முன்பே.

9. இத்தனை குணங்களையும் உடைய ஒரு குழந்தை உயிருடன் தான் இருக்கிறதா? கட்டாயமாக. இத்தனை அதிசயங்களை செய்து கொண்டிருக்கும் ஒரு கரு கட்டாயமாக உயிருடன் தான் இருக்கிறது.

பிறக்காததற்கு முன்பே இருக்கும் இக்கருவைப் பற்றி தேவன் என்ன நினைக்கிறார்? அவருடைய பார்வை எப்படி யிருக்கிறதென்று பார்ப்போம் வாருங்கள்!!

*நான் உன்னைத் தாயின் வயிற்றில் உருவாக்கு முன்னே உன்னை அறிந்தேன்; நீ கர்ப்பத்திலிருந்து வெளிப்படுமுன்னே நான் உன்னைப் பரிசுத்தம் பண்ணி, உன்னை ஜாதிகளுக்குத் தீர்க்கதரிசியாகக் கட்டளையிட்டேன் என்று சொன்னார்* (எரேமியா 1:5) பிறக்காததற்கு முன்னே தேவன் அக்குழந்தையை ஒரு தீர்க்கதரிசியாகக் கண்டு அதை பரிசுத்தம் பண்ணியிருக் கிறார். ஒருவேளை அவன் தாய் அக்கருவை சிதைத்திருப்பாள் என்று சொன்னால், அவள் ஒரு தீக்கதரிசியை கொன்றிருக்கிறாள் என்று தான் பொருள். தேவன் ஒருவனை உயிருள்ளவனாகப் பார்க்கையில் அதைக் கொன்ற பாவத்துக்கு ஆளாயிருந்திருப் பாள்.

இதே உண்மை ஏசாயா தீர்க்கதரிசியின் வாழ்க்கைக்கும் பொருந்தும். " ..... *தாயின் கர்ப்பத்திலிருந்தது முதல் கர்த்தர் என்னை அழைத்து, நான் என் தாயின் வயிற்றில் இருக்கையில் என் நாமத்தைப் பிரஸ்தாபப்படுத்தினார் ..... நான் தாயின் கர்ப்பத்திலிருந்ததுமுதல் கர்த்தர் தமக்குத் தாசனாக என்னை உருவாக்கினார்* " (ஏசாயா 49:1,5).

இதையே தாவீது சொல்லும் போது மிகத் தெளிவாக கர்ப்பத்தில் இருக்கும் கருவைப்பற்றி அதற்கு உயிர் இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார். என் தாயின் கர்ப்பத்தில் என்னை காப்பாற்றினீர். நான் பிரமிக்கத்தக்க அதிசயமாய் உண்டாக்கப் பட்டேன். நான் ஒளிப்பிடத்திலே உண்டாக்கப்பட்டேன்.

பூமியின் தாழ்விடங்களில் விசித்திர விரோதமாய் உருவாக்கப் பட்டேன். என் கருவை உம்முடைய கண்கள் கண்டது. என் அவயவங்களில் ஒன்றாகிலும் இல்லாதபோதே அவைகள் அனைத்தும், அவைகள் உருவேற்படும் நாட்களும் உமது புஸ்தகத்தில் எழுதியிருந்தது. (சங். 139:13-16).

வேதாகமம் தெளிவாகச் சொல்லுகிறது ஒரு உயிர் தன் தாயின் வயிற்றில் இருக்கும்போதே உயிர் பெற்று விடுகிறது. எனவே, யாக்கோபு ஆசிரியர் சொன்ன ஆவியில்லாத சரீரம் செத்ததாயிருக்கும் என்ற வசனத்தின்படி ஆவியுள்ள சரீரம் உயிரோடிருக்கும் என்பது நமக்கு தெளிவாகிறது. எனவே, உயிருள்ள ஒரு சரீரத்தில், அதாவது கருவில் உயிர் உண்டாகும் போதே ஆன்மா உண்டாகி விடுகிறது.

எனவே ஆரம்பம், ஆன்மா உண்டாகுதல் இரண்டுமே ஒரு குழந்தை கருவில் இருக்கும்போதே தேவனால் உருவாக்கப் படுகிறது.

அருமையான பிள்ளைகளே! ஆத்துமா முக்கியம் என்பதை அறிந்து கொண்டோம். எனவே ஆத்துமாவை வாழ வைப்போம்

மனப்பாட வசனம் :- " பிரியமானவனே, உன் ஆத்துமா வாழ்கிறதுபோல நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்கும்படி வேண்டுகிறேன் " (III யோ. 2).

**Abel R. Nayagam**

## தானியேலின் தீர்மானம்

1. *தேவனுக்கு சித்தமில்லாதவைகளை செய்யக்கூடாது என்று தன் இருதயத்தில் தீர்மானித்தான் (1:8).*

2. *பாவம் (தீமை) செய்யக்கூடாது என்று தீர்மானித்தான் (1:8)*

3. *தேவனுக்குக் கீழ்ப்படிய தீர்மானித்தான் (1:8)*

4. *தானும், தன்னோடு இருந்த ஞானிகள் அழியாத படிக்கு தீர்மானித்தான் (2:17)*

5. *தேவன் தனக்கு தந்த தரிசனத்தை வெளிப்படுத்த தீர்மானித்தான் (2:28)*

# பவுல் எப்போது இரட்சிக்கப்பட்டார்?

அநேகப் பிரசங்கிமார்களும், மதப்போதகர்களும் பவுல் தமஸ்குவுக்குச் செல்லும் போது இரட்சிக்கப்பட்டதாகச் சொல்கிறார்கள். இயேசு பவுலுக்கு முன்பாக தோன்றினபடியால் அது அவருக்கு இரட்சிப்பைக் கொண்டு வந்தது என யூகிக்கிறார்கள். இது உண்மையா? இயேசு பவுலுக்கு முன்பாக தோன்றினபோது பவுல் இரட்சிக்கப்பட்டார் என்பதற்கு என்ன சாட்சியம் கொடுக்கப்படுகிறது?

பவுல் அந்நேரத்தில் இரட்சிக்கப்பட்டார் என்கிற முடிவை அடிப்படையாக வைத்து வழக்கம் போல மூன்று காரணங்கள் கொடுக்கப்படுகிறது; 1. பவுலுக்கு இரட்சிப்பை அளிக்கும் நோக்கத்திற்காக இயேசு அவருக்கு முன்பாக தோன்றினார். 2. இயேசு பரிசுத்த ஆவியை பவுலின் இரட்சிப்பிற்கு ஒரு முத்திரையாக கொடுத்தார் 3. சவுல் அனனியாவினிடத்தில் வந்தபோது அனனியா சகோதரனாகிய சவுலே என்று அழைத்தார்.

இயேசு கிறிஸ்து பவுலை இரட்சிக்கும்படியாக அவருக்கு தரிசனமானதாக புதிய ஏற்பாட்டில் எந்த அடையாளமும் சொல்லப்படவில்லை. இத்தகைய போதனை வெறும் யூகமே இது வெளிப்படுத்தப்பட்ட உண்மை அல்ல. இந்த நோக்கத்திற்காக இயேசு பவுலுக்கு தரிசனமாயிருந்தால் இது ஒரு விதிவிலக்கு தான் விதி அல்ல. இயேசு யாரையோ இரட்சிப்பதற்காக அவர்களுக்கு தரிசனமானார் என்று எங்கும் பதிவு செய்யப்படவில்லை. எல்லா இடங்களிலும் தேவனால் அங்கிகரீக்கப்பட்ட பிரசங்கியார் இரட்சிப்பைப் பற்றியும், இயேசுவைப் பற்றியும் பிரசங்கித்திருக்கிறார் (அப்போஸ்தலருடைய நடபடிகள் 2:36-38; அப். 8:12,35-39; 11:14).

வசனப்பகுதி பவுல் ஒரு விதிவிலக்கல்ல என்பதைத்தான் காட்டுகிறது. அவர் என்ன செய்ய வேண்டும் என்று இயேசு அவருக்குச் சொல்லவில்லை, ஆனால், மாறாக இப்படிச் சொன்னார் " அதற்குக் கர்த்தர் நீ எழுந்து, பட்டணத்துக்குள்ளே போ, நீ செய்ய வேண்டியது அங்கே உனக்குச் சொல்லப்படும் " என்றார் (அப். 9:6). இயேசு அனுப்பிய அனனியா பவுலைப் பார்து இப்படியாகச் சொன்னார். " நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொண்டு, ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு " என்றான் (அப். 22:16).

இயேசு மற்றவர்களுக்கு முன்பாக தோன்றியது அவர்களுக்கு இரட்சிப்பை கொண்டு வருவதை நோக்கமாக கொண்டு அமையவில்லை. 1கொரிந்தியர் 15:8ல் எல்லாருக்கும் பின்பு,

அகாலப்பிறவி போன்ற எனக்கும் தரிசனமானார் என்று சொல்கிறார். தரிசிப்பது அல்லது காண்பது இரட்சிப்பை உண்டாக்குமானால், கடைசியாக இரட்சிக்கப்பட்டவர் பவுலாகத் தான் இருப்பார்.

இயேசு பவுலுக்கு ஏன் தரிசனமானார் என்பதை விளக்கி யிருக்கிறார். பவுலை இரட்சிக்கும்படியாக தான் பவுலுக்கு தரிசனமானதாக இயேசு சொல்லவில்லை, ஆனால், இயேசு பவுலிடம் இப்படியாகச் சொன்னார் " நீ கண்டவைகளையும் நான் உனக்குத் தரிசனமாகிக் காண்பிக்கப் போகிறவைகளையும் குறித்து உன்னை ஊழியக்காரனாகவும் சாட்சியாகவும் ஏற்படுத்து கிறதற்காக உனக்குத் தரிசனமானேன் " (அப். 26:16). இது பவுல் அப்போஸ்தலனாயிருப்பதற்கு இயேசுவின் அழைப்பாயிருந் தது. பவுல் இயேசுவின் உயிர்த்தெழுதலுக்கு மற்ற அப்போஸ்தலர் களைப் போல சாட்சியாயிருக்கவில்லை (அப். 1:22) அதேப் போல உயிர்தெழுந்த கர்த்தரை அவர் காணவுமில்லை. பவுல் தான் இயேசுவைக் கண்டதை ஆதாரமாக வைத்து தான் ஒரு அப்போஸ்தலன் தான் என்று வாதாடினார் (1 கொரிந்தியர் 9:1).

புதிய ஏற்பாடு பவுல் எப்போது பரிசுத்த ஆவியைப் பெற்றார் என்று வெளிப்படுத்தவில்லை. ஆனால், முடிவு என்ன வென்றால் அவர் ஞானஸ்நானம் பெறும்வரை பரிசுத்த ஆவியைப் பெறவில்லை என்பதுதான். பவுல் தமஸ்குவுக்கு செல்லும்போது பரிசுத்த ஆவியைப் பெறவில்லை என்பதை நாம் அறிகிறோம். ஏனென்றால் மூன்று நாட்களுக்குப் பிறகு அனனியா பவுலினிடத்தில் வந்தபோது பவுல் பரிசுத்த ஆவி யைப் பெறவில்லை என்று நாம் பார்க்கிறோம் (அப். 9:9; 9:17).

பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளும் விஷயத்தில் பவுல் ஒரு விதிவிலக்கானவர் அல்ல, மற்றவர்கள் எப்படி பரிசுத்த ஆவி யைப் பெற்றுக்கொண்டார்களோ அதேப் போல தான் பவுலும் பெற்றுக்கொண்டார் என்பதுதான் சாத்தியமான முடிவு. ஞானஸ் நானம் பெறுகிறவர்கள் இயேசுவுக்கு கீழ்ப்படிவதினால் தேவனு டைய பிள்ளைகளாகிறார்கள் அதன் மூலம் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்கிறார்கள் (அப். 2:38; அப் 5:32); கலாத்தியர் 4:6). மேற்கூறப்பட்ட காரியங்கள் ஒருவர் பரிசுத்த ஆவியைப் பெறுவதற்கு அவசியமானவைகளாகும். புதிய ஏற்பாட்டில் விதி விலக்காக புறஜாதிகளான கொர்நேலியுவின் வீட்டாருக்கு மாத்திரம் தேவன் புறஜாதிகளையும் ஏற்றுக்கொள்வார் என்பதை நிரூபிப்பதற்காக பரிசுத்த ஆவி அவர்களுக்கு கொடுக்கப்பட்ட சம்பவம் நமக்கு எழுதிக் கொடுக்கப்பட்டிருக்கிறது (அப். 10:47; 11:17:15:7,8).

அனனியா பவுலை சகோதரனாகிய சவுலே என அழைத்த உண்மை பவுல் ஏற்கனவே இரட்சிக்கப்பட்டார் என்பதற்கான நிரூபணம் அல்ல. பேதுரு தன்னுடைய சக யூதர்களைப்பார்த்து சகோதரர்களே என்று அழைத்தார், ஆனால், அதன்பின்பு அவர்

களைக் கீழ்கண்டவாறு செய்யும்படி சொன்னார். " நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங் கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள் " (அப். 2:38).

வேறு சில சூழ்நிலைகளில் பேதுரு சக யூதர்களை சகோதரர் என்று அழைத்திருக்கிறார் (அப். 3:17) ஸ்தேவானும் அவ்வாறு அழைத்திருக்கிறார் (அப். 7:2), பவுலும் அப்படி அழைத்தி ருக்கிறார் (அப். 13:26,38; 22:1; 23:1,5,6). அனனியா சவுலை அவர் கிறிஸ்துவுக்குள் சகோதரன் என்பதால் சகோதரனாகிய சவுல் என்று அழைக்கவில்லை, ஆனால் சவுல் தன் இனத்தானா யிருந்தபடியால் சகோதரனாகிய சவுலே என்று அழைத்தார்.

அனனியாவைப் பொறுத்தவரை பவுல் ஞானஸ்நானம் பெறும்வரை அவருடைய பாவங்கள் மன்னிக்கப்படவில்லை (அப். 22:16). சவுல் தமஸ்குவுக்குச் செல்லும் பாதையில் இரட்சிக்கப்படவில்லை. ஆனால், மாறாக அவர் ஞானஸ்நானம் பெற்ற போது அவருடைய பாவங்கள் இயேசுவின் இரத்தத்தி னால் கழுவப்பட்டபோது அவர் இரட்சிக்கப்பட்டார் (மாற்கு 16:16; 1 பேதுரு 3:21).

தேவன் பட்சபாதம் காட்டுவதில்லை. நாம் இரட்சிக்கப் படவேண்டுமென்றால் அவருக்கு கீழ்ப்படிய வேண்டும் (எபிரெயர் 5:9), இப்போது கிறிஸ்துவுக்கு வானத்திலும், பூமி யிலும் சகல அதிகாரமும் இருக்கிறது (மத்தேயு 28:18-20). நாம் இரட்சிக்கப்பட வேண்டுமென்றால் விசுவாசமுள்ளவர் களாகி ஞானஸ்நானம் பெறவேண்டும் (மாற்கு 16:15,16) இதைத்தான் பவுலும் தன்னுடைய பாவங்கள் மன்னிக்கப்படும்படியாகச் செய்தார் (அப். 22:16).

**Benny Martin** **Owen D. OlbrichT**

## பழைய ஏற்பாடு

1. *தேவனுக்கும் - இஸ்ரவேலருக்கும் இடையே ஏற்படுத்தப் பட்டது (யாத். 19:1-5).*
2. *இஸ்ரவேலருக்குக் கொடுக்கப்பட்ட தேச சட்டம் (யாத். 20:1-17).*
3. *கிறிஸ்துவாகிய "சந்ததி" வருமளவும் குறிப்பிட்ட காலம் வரை நீடித்திருக்கும்படியாக கொடுக்கப்பட்டது (கலா 3:16).*
4. *புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்களால் "நியாயப்பிரமாணம்" என்று அழைக்கப்பட்டு பேசப்பட்டுள்ளது (ரோமர் 7:1)*

சென்ற மாதத் தொடர்ச்சி

மலர்கள் இதழ் விரித்து மனங்கமழும் தோட்டம், வானிலே நிலவின் தேரோட்டம், இப்புவியின் வாழ்வில் அடிக்கடி வந்து போன கெத்சமேனே தோட்டத்திற்கு கடைசி முறை வந்த இறைமகனின் வதனத்தில் என்றுமிலாத வாடம், தங்கள் பதவியும், புகழும் கண்டுவிடும் ஆட்டம், என நினைத்த கூட்டம், தங்கள் உள்ளத்தில் நமது ஆண்டவர் இயேசுவை அழித்து விட வேண்டும் எனக்கொண்டது எண்ண ஓட்டம், முத்தத்தால் மனுஷகுமாரனை காட்டிக்கொடுக்க யூதாசுக்கோ அதிக நாட்டம், நமக்கு இரட்சிப்பைக் கொண்டு வர தோட்டத்தி லே தொடங்கி கல்வாரி மட்டும் இரத்தம் சிந்தப்புறப்படுகிறார் கர்த்தருடைய தாசனாகிய இயேசு ஆண்டவர். வாருங்கள் அவரைப்பற்றி சிந்திக்கலாவோம்.

**புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்களும் – துன்பப்படும் கர்த்தருடைய தாசனும் :**

அதிகாலை, மேய்ப்பர்கள் மந்தை காத்துக்கொண்டிருந்த வேளை, விந்தை நாதர் இயேசு, தாவீதின் ஊரில் அவதரித்தார் என்று வானதூதர் கொண்டு வந்தார் நல்ல செய்தியின் ஓலை. பிறந்தவர் வளர்ந்தார், நன்மை செய்கிறவராய் சுற்றித் திரிந்தார், பாவிகளை மீட்க உயிர்துறந்தார், மரணத்தின் கூர் ஒடித்து உயிர்த்தெழுந்தார், தந்தையை கண்டு அகம் மகிழ, மேகம் தனிலேறி, இகம் விட்டு பரத்திற்குப் பறந்தார், என்ற அவரின் வாழ்க்கையை இன்னும் விவரமாக விரிவாக நான்கு ஆசிரியர்கள் பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு எழுதிக்கொடுத்தார்கள், அப்படி எழுதியவர்கள் எல்லாம் அவர் துன்பப்பட்டதைக் குறித்து சொல்லும் போது, அவைகள் ஏசாயா தீர்க்கன் முன்னுரைத்த வாரே நடக்கிறது என்று எடுத்துக் கூறினார்கள் என்பதை சென்ற மாதம் விவரமாகப் பார்த்தோம்.

அதைத் தொடர்ந்து, மருத்துவராகிய லூக்கா எழுதின அப்போஸ்தலர் நடபடிகள் நூலை நாம் கவனிக்கும் போது, எட்டாம் அதிகாரத்திற்கு நமது கவனத்தை திருப்பினால், அங்கு ஒரு ரதம் எருசலேமிலிருந்து எத்தியோப்பியா நோக்கி சென்று கொண்டிருந்தது, பரியில் பூட்டப்பட்ட ரதத்தில் சென்றவர் பரிசுத்த ஆவியால் ஏவப்பட்டு ஏசாயாவால் எழுதப்பட்ட வரி களை வாசித்துக்கொண்டிருக்கிறார், அசரீரி கேட்டு பிலிப்பு ரதத் தில் சேருகிறார். வாசிக்கிற மந்திரியைப் பார்த்து ஏசாயா யாரைக் குறித்துப்பேசுகிறார் என வினாவிய பிலிப்பு, விடையாக இயேசு வைக் குறித்து பிரசங்கித்தார் எனக் காண்கிறோம். (அப். 8:27-35).

பிலிப்பு, ரதத்தில் சென்று கொண்டிருந்த மந்திரியைப் பார்த்து, தீர்க்கன் யாரைக் குறித்துப் பேசுகிறார் எனக்கேட்ட உடன் தீர்க்கமான பதிலை கொடுக்க முடியாத மந்திரி, ஒருவன் எனக்குத் தெரிவிக்காவிடில் எனக்கெப்படி தெரியும் என பிலிப்பைப் பார்த்து பதில் வினாத் தொடுக்கிறார். அத்துடன், தீர்க்கன் யாரைக் குறித்துப் பேசுகிறார் எனச் சொல்ல வேண்டு மென கேட்டுக்கொண்டார். அன்றைய நாளில், அநேக யூத மதப் போதகர்கள், ஏசாயா தான் பட்ட பாடுகளைத் தான் இப்படி எழுதியிருக்கிறார் எனப்போதித்தார்கள். வேறு சிலரோ, இல்லை யூதா தேசம், பாபிலோனுக்கு அடிமையாக கொண்டு போவதைத் தான் ஏசாயா எழுதினார் எனக் கூறினார்கள். ஆனால் ஆவியான வரின் ஏவுதலால் பிலிப்பு மிகச் சரியாக " இயேசுவைக் " குறித்து பேசினார் எனக் காண்கிறோம் (அப். 8:35) அதைக் கேட்ட மந்திரி, ரதத்தை நிறுத்தி, இயேசுவின் இரத்தத்தோடு தொடர்பு கொள்ளும் ஞானஸ்நானத்தில் தன்னை இணைத்துக் கொண்டான். (அப். 8:38) எனக்காண்கிறோம்.

அப்போஸ்தலர் நடபடிகள் நூலில் எட்டாம் அதிகாரத்திற்கு முன்னமே இயேசுவை கர்த்தருடைய தாசன் என்று மூலமொழி யில் நான்கு முறை குறிப்பிடப்பட்டிருக்கிறது என நாம் காணலாம். தமிழ் வேதாகமம் " பிள்ளை " என்று சொல்லை பயன்படுத்தியிருந்தாலும், மூல மொழியில், ஊழியன் அல்லது தாசன் அல்லது பிள்ளை என்று மொழி மாற்றம் செய்யக் கூடிய வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. ஆங்கில வேதாகமம் இந்த நான்கு இடத்திலும் ஊழியன் என்று தான் மொழி மாற்றம் செய்திருக்கிறது. (அப். 3:13,26;4:27,30).

பழைய ஏற்பாட்டில் ஆழ்ந்து, அதில் தேர்ந்து, தேவன் பேரில் பக்தி வைராக்கியம் கொண்டு, கிறிஸ்தவத்தை ஆக்ரோஷ மாய் எதிர்த்த சவுல், இயேசுவால் தமஸ்குவின் சாலையில் சந்திக் கப்பட்டு, எதிர்த்ததை ஏற்றுக்கொண்டபின், பல சபைகளை தேவ துணையுடன் ஸ்தாபித்தான், அப்படி ஸ்தாபித்த சபைகளுக்கு நிருபங்களை எழுதினான். ஏசாயா தீர்க்கன், துன்பப்படும் தாசனைக் குறித்து எழுதின பகுதியை அப்படியே எடுத்து எழுத விட்டாலும், அதே கருத்தை பவுல் பிரதிபலிப்பதை நம்மால் காணமுடியும். உதாரணமாக, " நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்.... " (ஏசாயா 53:5) என்ற கருத்தை பவுல் எழுதுகையில், " அவர் நம்முடைய பாவங்களுக்காக ஒப்புக் கொடுக்கப்பட்டும்.... " (ரோமர் 4:25) என்று பிரதிபலிக்கிறார். இன்னும் ஓர் உதாரணம் இதோ, " .... அநேகருடைய பாவத்தை தாமே சுமந்து ... " (ஏசாயா 53:12) என்ற கருத்தை பவுல் எழுதி கையில், " ... பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்

கினார்... " (II கொரி. 5:21) என்று பிரதிபலிக்கிறார். ஆக, பவுலும் ஏசாயா சொன்ன கருத்துக்களை இயேசுவுக்கு பொருத்தி பயன்படுத்தியிருக்கிறார் எனக் காணலாம்.

செம்படவத் தொழில் செய்து வந்த பேதுரு, மனுஷர்களைப் பிடிக்கிறவராக மாறிய பின், சிதறியிருக்கிறவர்களுக்கு இயேசுவின் தியாகத்தைக் குறித்துச் சித்தரிக்கையில், " அவர் பாவஞ் செய்யவில்லை, அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லை .... அவருடைய தழும்புகளால் குணமானீர்கள் " (1 பேதுரு 2:22,24; ஏசாயா 53:9; 53:5) என எழுதுகிறார். நமது ஆண்டவர், புவிதனில் பூத்ததும், பாவமில்லாத அவர் நமக்காக சிலுவையில் குருதி சிந்தியதும், ஏதோ தற்செயலாக நடந்து விடவில்லை. பல நூற்றாண்டுகளுக்கு முன், தேவன் ஏசாயாவைக் கொண்டு சொன்ன வார்த்தையை நிறைவேற்ற வார்த்தையாக இருந்த அவர் மனு உருக்கொண்டார். புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் இக்கருத்தை வெளிப்படுத்தியிருப்பதை நாம் இது வரைக் கண்டோம், அடுத்த மாதம் ஏசாயாவைக் குறித்த பின்னணி தகவல்களைப் பார்ப்போம்.

(தொடரும்) ஜே. பிக்கின்ஸ்

## இயேசு தன்னையே நமக்காகக் கொடுத்தார்

தன் சிரசை முள்முடி சூட்டுவதற்கு

தன் முகத்தை காரி உமிழ்வதற்கு

தன் முதுகை வாரினால் அடிக்கப்படுவதற்கு

தன் கைகளையும், கால்களையும் ஆணிகளால் கடாவப்படுவதற்கு

தன் விலாவை ஈட்டியால் குத்துவதற்கு

தன் சரீரத்தை கேலியுடன் கூடிய ஆடையை அணிவதற்கு

தன் ஆவியை பிதாவினிடத்தில் ஒப்புக்கொடுப்பதற்கு

இத்தனையும் அவர் நமக்காகக் கொடுத்திருக்க நாம் அவருக்காக என்னத்தைக் கொடுக்கிறோம்?

அன்பான வாசகரே, நாம் இரத்தசாட்சிகளின் தொடர் கட்டுரையில் இரண்டாம் பகுதியில் அப்போஸ்தலனாகிய பவுலைக் குறித்து படித்து வருகிறோம். அவர் மூன்று சுவிசேஷப் பிரயாணங்களை முடித்து எருசலேமுக்குச் சென்று மூப்பர்களிடம் தனது ஊழிய விவரங்களைத் தெரிவித்துவிட்டு மூப்பர்களின் ஆலோசனைப்படி யூதர்களின் பவுலைக் குறித்தான தவறான காரியங்களை பொய்யாக்குவதற்காக எருசலேம் தேவாலயத்திற் குள் சென்றார். ஆனால், பவுல் அங்கே கைது செய்யப்பட்டார்! அவர் சிறை வைக்கப்படுவதற்குச் செசரியா பட்டணத்திற்குக் கொண்டு போகப்படுவதற்கு ரோம ராணுவப் படையினர் ஆயத் தப்படும் போது பவுல் சேனாதிபதியை நோக்கி ஜனங்களுடன் பேசும்படி எனக்கு உத்தரவுக் கொடுக்கும்படி உம்மை வேண்டிக் கொள்ளுகிறேன் என்றார் (அப். 21:29).

**பவுலின் சாட்சி**

பவுல் எருசலேமிலுள்ள அந்தோனியா கோட்டைக்குள் உள்ளூர் ரோமப் படையின் அதிகாரியின் நடுவில் இருந்தார். அவர் கிழிந்துபோன வஸ்திரத்துடன் மற்றும் அவரது உடல் காயப் பட்டபடியால் அவரது வஸ்திரம் இரத்தம் படிந்த நிலையில் காணப்பட்டார். அவர் தனது தாய்மொழியான எபிரெய பாஷை யிலே பேசத் தொடங்கினார். ஜனங்கள் அதிக அமைதலாயிருந் தார்கள். (அப். 22:1,2) அப்பொழுது அவர் சகோதரரே, பிதாக்க ளே, நான் இப்பொழுது உங்களுக்குச் சொல்லப்போகிற நியாயங் களுக்குச் செவி கொடுப்பீர்களாக நான் யூதன், சிலிசியா நாட்டி லுள்ள தர்சுபட்டணத்திலே பிறந்து இந்த நகரத்திலே கமாலியே லின் பாதத்தருகே வளர்ந்து முன்னோர்களுடைய வேதப் பிரமா ணத்தின்படியே திட்டமாய்ப் போதிக்கப்பட்டு இன்றைய தினம் நீங்களெல்லாரும் தேவனைக் குறித்து வைராக்கியமுள்ளவர்களா யிருக்கிறதுபோல நானும் வைராக்கியமுள்ளவனாயிருந்தேன் என்று பவுல் சொல்லிக் கொண்டிருந்தார் (அப். 22:3).

இங்கே பவுல் ஏன் தனது சாட்சியைக் குறித்துக் கூறினார் என்றால் யூதர்கள் பவுல் மீது சொல்லப்பட்ட குற்றச்சாட்டுக்கள் எல்லாம் தவறானது என்று நிரூபிக்க அவர் விளக்கம் கூறினார். இங்கே பவுல் சாட்சி கூறினார் என்பதற்குப் பதிலாக யூதர்களுக்கு விளக்கம் கூறினார் என்பதே முக்கியமாக இருக்கிறது.

இன்று அநேகர் வேத வசனத்தைச் சொல்லுவதைக் காட்டிலும் தன் சொந்த சாட்சியைச் சொல்லுவதையே விரும்பு கின்றனர். அவர்கள் தங்கள் சாட்சிகளை ஆராதனைகளிலும், ஜெபக்கூட்டங்களிலும் மற்றும் நற்செய்திக் கூட்டங்களிலும் கூறி வருகின்றனர். அப்போஸ்தலர்கள் தங்களையே பிரசங்கிக்காமல் கிறிஸ்து இயேசுவைக் கர்த்தரென்றும் தங்களை கிறிஸ்துவின் ஊழியக்காரர்கள் என்றும் பிரசங்கித்தனர் (II கொரி 4:5) மேலும் பேதுரு கூறும்பொழுது ஒருவன் போதித்தால் வேத வாக்கியங்க ளின்படி போதிக்கக்கடவன் என்றார் (I பேதுரு 4:11).

பவுல் தன்னைக் குறித்து யூதர்களிடத்தில் உண்மையைக் கூறுகிறார், யூதர்களின் குற்றச்சாட்டுகளுக்கு பதில் கூறுகிறார். அவர் தனது சாட்சியை ஆராதனையிலோ, ஜெபக்கூட்டத்திலோ அல்லது நற்செய்தி கூட்டத்திலோ கூறவில்லை! அவர் ரோம

படையினால் கைது செய்யப்பட்டு சிறைக்குக் கொண்டு போகப் படும்போது அனுமதி கேட்டுக்கொண்டுக் கூறுகிறார். எனவே, இன்று சாட்சி சொல்லும் நண்பர்கள் சிந்தித்துப்பார்க்கவும்.

**யூதர்கள் பவுலின் மீது கோப வெறி கொண்டனர்**

பவுல் தமஸ்குவுக்குப் போகும் வழியில் நடந்த நிகழ்ச்சியைக் கூறிக்கொண்டு வந்தார். அந்த நிகழ்ச்சியில் இயேசு கிறிஸ்துவை சந்தித்ததை கூறினார். அவரைக் குறித்து புறஜாதிகளிடத்தில் சொல்லுவதற்கு (பவுலை) அனுப்புவதாக கூறியதைக் கூறும் பொழுது, யூதர்கள் அதுவரை அமைதியாக கேட்டவர்கள் புறஜாதி என்ற வார்த்தையைக் கேட்டவுடனே பவுலை இந்த பூமியிலிருந்து அகற்ற வேண்டும் இவன் உயிரோடு இருக்கிறது நியாயமில்லை என்று மிகுந்த சத்தமிட்டுச் சொன்னார்கள் (அப். 22:21,22) இவ்விதமாய் அவர்கள் கூக்குரலிட்டுத் தங்கள் மேல் வஸ்திரங்களை எறிந்துவிட்டு ஆகாயத்திலே புழுதியைத் தூற்றினார்கள். (அப். 22:23) ஒருவேளை அவர்கள் பவுலைக் கல்லெறியத் தயார் செய்து கொள்வதற்குத் தங்கள் மேல் வஸ்திரத்தை அகற்றியிருக்கலாம் (அப்.22:20;IIசாமு.16:13) அவர்கள் வெறி பிடித்த விலங்குகள் போலத் தங்கள் கோபத்தை வெளிப்படுத்தினார்கள்! இவ்வாறு அவர்கள் கோபம் அடைவதற்குக் காரணம் புறஜாதியார் என்ற வார்த்தையைக் கேட்டவுடனே கட்டுக்கடங்காத வெறி கொண்டனர் என்பதே காரணமாயிருக்கிறது! அதாவது அவர்கள் தங்கள் இனத்தின் மீது கொண்டிருக்கும் வெறியைக் காட்டினர்.

அன்பானவர்களே, மொழிப்பற்று, இனப்பற்று என்று நாம் இருந்தால், மதக்கலவரமும், இனக்கலவரமும், மொழிக் கலவரமும் நிச்சயமாக உண்டாகும். கிறிஸ்தவம் என்பது மொழி, நிறம், ஜாதி என்றில்லாமல் இருக்கிறது. கிறிஸ்து எல்லா மொழியினருக்காகவும் சிலுவையிலே தன் இரத்தத்தைச் சிந்தினார். தேவன் தமது ஒரே பேறான குமாரன் இயேசு கிறிஸ்துவை உலகத்திற்கு இவ்விதமாகக் கொடுத்தார் (யோவா 3:16). தேவன் பட்சபாதமுள்ளவரல்ல எந்த ஜனத்திலாயினும் அவருக்குப் பயந்திருந்து நீதியைச் செய்கிறவன் எவனோ அவனே அவருக்கு உகந்தவன் (அப்.10:34,35). யூதர்கள் தங்கள் இனவெறியினால் புறஜாதியார் என்ற வார்த்தையைக் கேட்டவுடனே பவுலின் மீது கோப வெறி கொண்டனர்!.

**பவுல் எருசலேமில் புறக்கணிக்கப்படுதல்**

பவுல் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளும் முன்பு எருசலேமில் அவருக்கென்று தனி மதிப்பு இருந்திருக்கிறது. ஆலோசனை சங்கத்தாரிடத்திலும், பிரதான ஆசாரியாரிடத்திலும் நல்ல போக்கு வரவு இருந்திருக்கிறது. அவரை அறியாத ஜனங்களே இல்லை. ஆனால் இப்போது பவுல் குற்றஞ் சாட்டப்பட்டவராக எருசலேமில் கைதியாக நிற்கும்போது அவரை எருசலேமிலுள்ளவர்கள் அனைவரும் புறக்கணிப்பதை அறிகின்றோம்.

பவுலை எருசலேமிலுள்ள யூதர்கள் புறக்கணிக்கின்றார்கள் என்று அறிந்த ரோமபடை சேனாதிபதி பவுலின் மேல் யூதராலே ஏற்படுத்தப்பட்ட குற்றம் இன்னதென்று நிச்சயம் அறிய விரும்பி அவன் மறுநாளிலே அவனைக் கட்டவிழ்த்து, பிரதான ஆசாரியரையும், ஆலோசனை சங்கத்தார் அனைவரையும் கூடி வரும்படி கட்டளையிட்டு அவனைக் கூட்டிக்கொண்டு போய் அவர்களுக்கு முன்பாக நிறுத்தினார் (அப். 22:30).

பவுல் தேவாலய மண்டபங்களின் முன்னால் முந்திய நாளில் பெற்றிருந்த அடிகளினால் அவரது உடல் வருந்தித் துடித்துக் கொண்டிருந்தது. ஆனாலும், ஆலோசனை சங்கத்தார் முன்னால் அவர் நின்றார்! பேதுரு, யோவான் இன்னும் மற்ற அப்போஸ்தலர்கள் நின்ற இடத்தில் பவுல் நின்றார்!!.

பல வருடங்களுக்கு முன்பு பவுல் ஆலோசனை சங்கத்தாருடன் உட்கார்ந்தார். அதாவது, அவர் அந்த சங்கத்தின் உறுப்பினராக இருந்திருக்கலாம் அல்லது ஸ்தேவானை விசாரிக்கும் போது பவுல் அங்கே இருந்திருக்கலாம் (அப். 8:1). ஆனால், இப்பொழுதோ அந்த ஆலோசனை சங்கத்தார் முன்பாக அவர் நிற்கிறார்! பல முகங்களை அவர் அடையாளம் கண்டு கொண்டார். சில முகங்களை புதிய முகங்களாகக் கண்டார். அவர் அந்த ஆலோசனை சங்கத்தாரை உற்றுப்பார்த்து சகோதரரே இந்நாள் வரைக்கும் எல்லா விசயங்களிலும் நான் நல் மனசாட்சியோடே தேவனுக்கு முன்பாக நடந்து வந்தேன் என்று சொன்னார் (அப். 23:1).


ஆலோசனை கூட்டத்தை கூட்டிய பிரதான ஆசாரியன் அனனியா என்பவன் பவுல் பேசின வார்த்தைகளைப் பொறுக்க முடியாமல் இவன் வாயில் அடியுங்கள் என்று கட்டளையிட்டான் (அப்.23:2) இந்த பிரதான ஆசாரியன் அனனியா என்பவன் தேவ பக்தியற்றவன் என்றும் மனசாட்சிக்குப் பயப்படாதவன் மற்றும் ரோம அரசாங்கத்திற்கு ஒத்துழைப்பு கொடுத்து இஸ்ரவேல் தேசத்திற்கு துரோகம் செய்பவன் என்றும் கூறப்படுகிறது! பவுலை அடித்த காட்டுத்தனமான அடியானது அப்போஸ்தலனை அமைதிப்படுத்தவில்லை. பவுல் இரத்தத்தைத் துப்பி விட்டு வெள்ளையடிக்கப்பட்ட சுவரே தேவன் உம்மை அடிப்பார். நியாயப் பிரமாணத்தின்படி என்னை நியாயம் விசாரிக்கிறவராய் உட்கார்ந்திருக்கிற நீர் நியாயப்பிரமாணத்திற்கு விரோதமாய் என்னை அடிக்கச் சொல்லலாமா? என்றார் (லேவி 19:15, உபா 25:1,2).


பவுலின் வார்த்தையினால் கூட்டமானது அதிர்ச்சியடைந்து தேவனுடைய பிரதான ஆசாரியரை வைகிறாயா என்று அவர்கள் கேட்டார்கள். உடனே பவுல் சகோதரரே இவர் பிரதான ஆசாரியர் என்று எனக்குத்தெரியாது. உன் ஜனத்தின் அதிபதியை தீது சொல்லாயாக என்று எழுதியிருக்கிறதே என்று கூறினார் (யாத். 22:28). அதன் பின்பு எருசலேமில் மிகுந்த கலகம் உண்டான போது பவுல் அவர்களால் பீறுண்டு போவானென்று சேனாதிபதி பயந்து பவுலை அவர்கள் நடுவிலிருந்து இழுத்துக்கொண்டு செசரியா கோட்டைக்குக் கொண்டுபோகும்படி கட்டளையிட்டான். (அப். 23:3-10) பவுல் அந்த இரவில் செசரியா பட்டணத்திலுள்ள கோட்டையில் ரோமாபுரி அதிகாரத்தின் கீழ் சிறையில் தனிமையாக இருந்தார். அவருடைய இருதயம் கலங்கிப் போயிருந்தது. அவரது துடிப்பான ஊழியம் முடிந்து போயிற்றா? கவலையோடு இருந்தார். அப்போது கர்த்தர் பவுலின் அருகே நின்று பவுலே திடன் கொள் நீ என்னைக் குறித்து எருசலேமில் சாட்சி கொடுத்தது போல ரோமாவிலும் சாட்சி கொடுக்க வேண்டும் (அப். 23:11) என்றார். தேவன் அவரை கைவிட வில்லை அவருடன் இருந்தார் (எபி 13:5,6).

(தொடரும்) **K. பாஸ்கர், சிறுமுகை**

# BIBLE MEDITATION

## TV PROGRAM



**HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRILANKA**

| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 6.45 - 7.00 a.m. | Box. 3815<br>New Delhi - 110049 | Sunny David |
| TELUGU | Monday<br>to Friday | 5.30 - 5.45 | Box. 80<br>Kakinada - 533 001 | Joshua<br>Gootam |
| TAMIL | Sunday<br>Thursday<br>Friday | 6.45 - 7.00 p.m.<br>5.45 - 6.00 p.m.<br>5.30 - 5.45 p.m. | Box. 8405<br>Bangalore-560 084 | P.R. Swamy |
| MALAYALAM | Friday | 3.45 - 4.00 p.m. | Sunny Meads Lane,<br>Behind Sanskrit<br>College,<br>Trivandrum-695 034 | P.K. Varghee |

Regd. News Paper RNI No. 47661/87- Postal Regn. No. Erode/26/2009-2011
Posted at Erode HPO on 20/21 of Every Month.

**திருமறை ஆசான்**
இதழ் ஆசிரியரின்
**திருமறை தியானம்**
தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

தமிழன் TV சனி காலை 7:15 மணி
தமிழன் TV திங்கள் காலை 7:00 மணி

# வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம்

- Advanced Bible Correspondence Course -

**பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புபவர்களுக்கு இது ஓர் அரிய வாய்ப்பு.**

ஆம், வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு ஏழு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 100 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

விருப்பமுள்ளவர்கள் தபால் செலவுக்கு
ரூ. 100/- மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.

எங்களிடம் ஏற்கனவே அஞ்சல் வழிக்கல்வி BASIC BIBLE COURSE படித்து முடித்தவர்களும், படிப்பவர்களும் இதில் சேர்ந்து பயன்பெறலாம்.

இயக்குனர்

## அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

த.பெ.எண் 27, காங்கேயம் 638 701.
தமிழ்நாடு , இந்தியா.

**Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.**
**Editor : S. Rajanayagam.**